
# திருக்கோயில்





மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் 23-3-2002 அன்று பகல் 12.15 மணி அளவில் மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ''அன்னதானத் திட்ட''த்தைத் தொடங்கி வைத்து ''அன்னதான உண்டிய''லில் தம் காணிக்கையைச் செலுத்துகிறார்கள்.



# திருக்கோயில்

திங்கள் இதழ்



| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |

| மாலை 44 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | சித்ரபானு - சித்திரை - ஏப்ரல், 2002 | மணி 4 |
|---|---|---|---|



### சிறப்பாசிரியர்

**திருமிகு த.ரா. சீனிவாசன் இ.ஆ.ப.**
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

### ஆசிரியர்

**முனைவர் த. அமிர்தலிங்கம்,**
**எம்.ஏ., பி.எச்.டி**

### ''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

**திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பி.எல்.**
கூடுதல் ஆணையாளர்

**திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.**
இணை ஆணையாளர், தலைமை இடம்
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திரு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.**
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


<u>முகப்பு</u>

**பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி**

## பொருளடக்கம்


**திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் தொடக்க விழா** - முனைவர் த. அமிர்தலிங்கம்

**சித்ரபானுவே வருக! வருக!** - திருமதி ஏ. பட்டம்மாள் ஆனந்தா

**அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில்** - வி. இராஜசேகரன்

**பெரிய புராணச் சிறப்பு** - டாக்டர் சிவப்பிரியா

**திருவேட்டீசுரம்** - திருமதி இராஜேசுவரி விசுவநாதன்

**விளைதீர்க்கும் நாயகன்** - திருமதி உமா சுப்பிரமணியம்

**மணிமொழி அருளிய மாணிக்கவாசகர்** - கவிஞர் சு.க. ஏகாம்பரம்

**நினைப்பற நினைந்தேன்** - சேது. சிவா

**''அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே''** - சிவத்திரு த. ஆறுமுகம்

**நம்பிக்கையும் தும்பிக்கையும்** - சமயச்செம்மல் ஏ.வி. கோதண்டராமன்

**பிரகலாதாழ்வார்** - திருமதி கே. இராஜலட்சுமி



உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :



உயர்திரு ஆணையாளர் அவர்கள்
**திருக்கோயில்**
இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை
*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*
தொலைபேசி : *8279407*



ஏப்ரல் இதழ் 2002

# திருக்கோயில்களில் புண்ணியமிகு ''அன்னதானத் திட்டத்'' தொடக்கவிழா

– முனைவர் த. அமிர்தலிங்கம்

தானங்களில் சிறந்தது அன்னதானம்தான் என்பதை நம்முடைய சமயச் சான்றோர்களும், சமுதாயச் சான்றோர்களும் பன்னெடுங்காலமாகவே நமக்கு உணர்த்தி வந்துள்ளார்கள்.

''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ''புறநானூறு'' என்ற சங்க இலக்கியம் நமக்கு நன்கு அறிவுறுத்துகின்றது.

நாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி அளவு உணவையேனும் தானம் வழங்கியே உண்ணுதல் வேண்டும் என்று சித்தர் திருமூலர் ''திருமந்திரம்'' எனும் ஒப்பற்ற நூலில் அறிவுறுத்துகின்றார்.

''யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே''

எனும் திருமந்திரத்தில் உண்ணும்போது ஒரு கைப்பிடி உணவையாவது தானம் வழங்கியே உண்ணுதல் வேண்டும் என்பதைச் சித்தர் திருமூலர் **''யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி''** என வலியுறுத்திக் கூறியுள்ளமை காண்க.

காக்கைகள் கூட தம் சுற்றத்தைக் கூவியழைத்துப் பகுத்துண்டு வாழும் பண்பாட்டினையும் சித்தர் திருமூலர் எடுத்துக் காட்டுகின்றார்.

''ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை உடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே''

எனும் திருமந்திரப் பாடலில் பசிவேளையில் வருவோர் யாவர் ஆயினும் அவர்க்கு அன்னதானம் செய்தல் அவசியம் என்பதையும் திருமூலர் வலியுறுத்திக் கூறக் காண்கின்றோம்.

இறைவனுக்குக் கொடுக்கப்படுவதை விடவும், அடியார்க்குக் கொடுக்கப்படுவதுவே சாலச் சிறந்தது என்பதையும் வலியுறுத்திக் கூறும் திருமூலர், அடியவர்க்குக் கொடுப்பது இறைவரைப் போய்ச் சேர்ந்து விடும் என்று கூறியுள்ள பின்வரும் திருமந்திரப் பாடலாலும் அன்னதானச் சிறப்பை நாம் நன்கு உணரலாம்.

''படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில்
நடமாட கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயிற் பகவற்கு அதாமே''

இத்திருமந்திரத்தில் நடமாடும் கோயில் ஆகிய பக்தர்க்கு உணவிடுதல் ஆண்டவனுக்கு வழங்கப் படுவதை விடவும் பெருமைமிக்கதாக சித்தர் திருமூலர் போற்றி உரைத்திருத்தலையும் காணுகின்றோம்.

அடியார் உணவுண்டால் அது மூவுலகமும் உண்டதைப் போன்றது எனவும் திருமூலர்,

''தண்டறு சிந்தை தபோதனர் தாம்மகிழ்ந்து
உண்டது மூன்று புவனமும் உண்டது
கொண்டது மூன்று புவனமும் கொண்டதுஎன்று
எண்திசை நந்தி எடுத்துரைத் தானே''

எனப் பாடியிருத்தலையும் காணலாம்.

அடியார்க்கு இடுதல் ஆகிய உணவு, ஆண்டவனுக்கே இட்டது ஆகும் என்பதாலேயே அடியார்க்கு இடுதலாகிய அன்னதானத்தை **''மகேசுவர பூசை''** என்றே திருமூலர் தலைப்பிட்டுப் போற்றியிருத்தலும் இங்கு நாம் உணர்ந்து மகிழத்தக்கது.

தூய அடியார்க்கு வீடுகள் ஆயிரம் வழங்கும் புண்ணியத்தை விடவும், திருக்கோயில்கள் ஆயிரம் கட்டும் புண்ணியத்தை விடவும், ஞானியராகிய அடியார்க்கு உணவிடுதல் - அதுவும் பசிவாட்டும் பகல் வேளையில் உணவிடுதல் ஆகிய புண்ணியமே மிக மிக மேலானது என்பதையும் உறுதிபடக் கூறும் திருமூலர்




''அகரம் ஆயிரம் ஆரியர்க்கு ஈயில்என்?
சிகரம் ஆயிரம் செய்து முடிக்கில் என்?
பகரும் ஞானி பகல்ஊண் பலத்துக்கு
நிகரிலை என்பது நிச்சயம் தானே!''

எனப் பாடியுள்ள திருமந்திரமும் இங்கு நாம் உணர்ந்து கடைப்பிடிக்க வேண்டிய ஒரு ஒப்பற்ற திருமந்திரம் ஆகும்.

இத்தகைய போற்றரும் புண்ணிய அன்னதானம் செய்து அடியார்களைப் போற்றுதலே இப்பூவுலகில் பிறந்த மக்களாகிய நாம் பெற்ற பிறவிப் பயன் என்பதைத் தெய்வச் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் தெளிவுபடுத்தி உள்ளார்.

''மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மையாம்''

என்பது மகேசுவரப் பூசையின் மாண்பினை எடுத்துக் காட்டும் தெய்வச் சேக்கிழார் பொன்மொழியாகும்.

திருக்கோயில்களில் கொண்டாடப்பெறும் அனைத்துச் சிறப்புமிகு திருவிழாக்களிலும் இத்தகைய அடியார்க்கு அன்னதானம் இடுதலாகிய மகேசு வரப்பூசை, அன்பர் பூசை, சீலமார் பூசை மிக மிகச் சிறப்பாக நடைபெற்றன என்பதை நாளும் இன்னிசை யால் தமிழ் வளர்த்த திருஞான சம்பந்தர் ''மட்டிட்ட''

எனத் தொடங்கும் தம்முடைய திருமயிலைத் திருப் பதிகத்தில் எடுத்துக் காட்டியுள்ள திறமும் இங்கு நாம் உணர்ந்து மகிழத்தக்க ஒன்றாகும்.

''ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல்''

''ஐப்பசி ஓணவிழாவும் அருந்தவர்கள்
துய்ப்பனவும்''

''நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம்''

''பலிவிழாப் பாடல்செய் பங்குனி உத்திரநாள்''

என்று ஒவ்வொரு திருவிழாவிலும் நடமாடும் கோயில்கள் ஆகிய அடியார்களுக்கு அன்னதானம் அகமகிழ்வுடன் வழங்கப்பட்ட சிறப்பினைத் திருஞான சம்பந்தப் பெருமான் எடுத்துக் காட்டியுள்ளார்.

திருக்கோயில்கள் தோறும் அடியார்களுக்கு அன்னம் பாலித்தலாகிய மகேசுவரப் பூசை சிறப்புற நிகழ்ந்தமையைத் திருநாவுக்கரசர் பெருமானும்

''அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்''

எனும் எழில்மிகு தொடரால் உணர்த்தியிருத்தல் காணலாம்.

திருவீழிமிழலைத் திருக்கோயிலில் திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் அன்னதானம் புரிந்த அருஞ்சிறப்பைச் சேக்கிழார் பெருமான் பின்வரும் பெரியபுராணப் பாடலில் எழிலுற எடுத்து இயம்பியுள்ளமையைக் காண்க.

''காதலொடுஞ் தொழுதெடுத்துக் கொண்டு நின்று
கைகுவித்துப் பெருமகிழ்ச்சி கலந்து பொங்க
நாதர்விரும் படியார்கள் நாளும் நாளும்
நல்விருந்தாய் உண்பதற்கு வருக என்று
தீதில்பறை நிகழ்வித்துச் சென்ற தொண்டர்
திருவமுது கறிநெய்பால் தயிரென் றின்ன
ஏதமுறா தினிதுண்ண ஊட்டி அங்கண்
இருதிறத்துப் பெருந்தவரும் இருந்த நாளில்''

இப்பெரிய புராணப் பாடல் இருதிறத்துப் பெருந் தவர்கள் ஆகிய திருஞானசம்பந்தரும், திருநாவுக் கரசுப் பெருமானும் தாமே முன்னின்று ''அடியார்கள் நாளும் நாளும் நல்விருந்தாய் உண்பதற்கு வருக'' என்று பறை அறிவித்துப் பரிவுடன் அன்னதானம் செய்வித்த அருஞ்சிறப்பை விவரித்திடக் கண்டு மகிழுகின்றோம்.

இன்னும் பெரிய புராணம் ''தொண்டு ஆனார்க்கு எந்நாளும் சோறளிக்கும் திருத்தொண்டர்'' என்று சிறுத்தொண்ட நாயனாரையும், ''சீலமார்பூசை செய்த திருத்தொண்டர்'' என்று இளையான்குடிமாற நாயனாரையும் அவர்கள் செய்த அன்னதானத்தைச் சிறப்பித்துப் போற்றிடக் காணுகின்றோம்.

அன்னதான அறப்பணியைச் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் பற்பல நாயன்மார்களின் வரலாற்றிலும் இணைத்துப் பெருமையுடன் பேசுகின்றார்.

''நறை இதழித் திருமுடியார் அடியாரை நாடோறும்
முறைமையினில் திருஅமுது முன்னூட்டிப்
பின்னுண்ணும்
நிறையுடைய பெருவிருப்பால் நியதியாகக்
கொள்ளும்
துறைவழுவா வகைஒழுகும் தூயதொழிற்
தலைநின்றார்.''

''தூயதிரு அமுதுகனி கன்னல்அறு சுவைக்கறி நெய்
பாயதயிர் பால்இனிய பண்ணியம் உண்நீர் அமுதம்
மேயபடி யால்அமுது செய்விக்க மிசைந்து அடியார்
மாயிருஞா லம்போற்ற வரும்இவர்பால் மனம்
மகிழ்ந்தார்''

என வரும் பெரிய புராண பாடல்களில் அன்னதானம் வழங்கப்பட்ட திறம் வகுத்து விரிவாகப் போற்றப்பட்டுள்ளது.

63 நாயன்மார்களும் பன்னிரு ஆழ்வார்களும் பெரிதும் போற்றியுள்ள இவ்வன்னதான அறப்பணியின் மாண்பினை உணர்ந்துதான் முதற்கட்டமாக தமிழகமெங்கும் உள்ள திருக்கோயில்களில் 63 திருக்கோயில்களைத் தேர்வு செய்து நாள்தோறும் திருக்கோயில்களுக்கு வருகை தரும் அடியார்களுக்குப் பகல் வேளையில் அன்னதானம் வழங்கும் நல்ல புண்ணிய மிகு திட்டத்தை நம் இந்துசமய அறநிலைய ஆட்சித் துறை தொடங்கியுள்ளது.

சென்ற காலத்தின் பழுதிலாத் திறத்தையும், இனி வருங்காலத்தின் சிறப்பையும் எடுத்துக்காட்டும் இவ்வற்புதமான திட்டத்தை நம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 23.3.2002 சனிக்கிழமையன்று பகல் 12.15 மணிக்கு ''திருக்கபாலீச்சரத்து அமுது'' என்று சேக்கிழார் போற்றியுள்ள மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் அடியார்களுக்குத் தம் திருக்கரத்தால் உணவு படைத்துத் தொடங்கி வைத்திருப்பது இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கத்தக்க மகத்தான வைபவம் ஆகும்.

''பசித்தோர் முகம்பார்'' என்றார் நம் பட்டினத்தடிகள். ''பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக'' என்கிறது மணிமேகலை.

''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோறிரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டு உளம் பதைத்தேன்
நீடிய பிணியில் வருந்துகின்றோர்என்
நேருறக் கண்டுளம் துடித்தேன்
ஈடில் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சு
இளைத்தவர் தமைக் கண்டே இளைத்தேன்''

என்று பாடுகின்றார் அருட்பிரகாச வள்ளலார்.

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி''

என்ற திருவள்ளுவரின் பொன்மொழியைப் பொன் எனப் போற்றி அற உள்ளம் கொண்ட நன்கொடையாளர்கள் வழங்கும் நன்கொடைகளைக் கொண்டே இந்த நல்லறத் திட்டத்தை நாளும் செவ்வனே நிறைவேற்றிட நம் இந்து சமய அறநிலையத்துறை திட்டம் தீட்டியிருப்பது மனிதநேயத்தை வளர்க்கும் மகத்தான திட்டம் என்பதில் ஐயமில்லை.

மேகமானது இடி இடித்தால் கொஞ்ச தூரமே கேட்கும் எனவும், அறச்செயல்களுக்குக் ''கொடுத்தார்'' என்ற சொல்லானது மூவுலகிற்கும் கேட்கக் கூடியது எனவும் நம்முடைய நீதி நூல்கள் கூறுகின்றன.

''அடுக்கிய மூவுலகும் கேட்குமே சான்றோர்
கொடுத்தார் எனப்படும் சொல்''

என்பது நாலடியார்.

சிறுத்தொண்ட நாயனார் அடியார்களுக்கு அன்னதானம் வழங்க வழங்க அவருடைய பெருமையானது கயிலாயத்தில் ஒலித்தது என்றும், அதைப் போல திருமங்கையாழ்வார் அடியார்களுக்கு அமுது வழங்க வழங்க அவருடைய பெருமை வைகுந்தத்தில் ஒலித்தது என்றும் நம் புராணங்கள் அன்னதான மகிமையை விவரிக்கின்றன.

எறும்புக்கு நொய்யரிசி வழங்கினார் ஒரு பக்தர். அதனால் இறைவன் மகிழ்ந்து அப்பக்தருக்குச் சிறிது பொருள் கொடுத்து அருள்புரிந்தார். அவ்வாறு கிட்டிய சிறுபொருளைக் கொண்டு அப்பக்தர் அடியார்களுக்கு அமுது வழங்க குபேரனுக்கு நிகராகப் பெரும் பொருளை இறைவன் வழங்கித் திருவருள் புரிந்தார் எனவும் நம் இலக்கியங்கள் கூறுகின்றன.

''கட்டத் துணியற்றுக் காந்துபசிக் கன்னமற்று
எட்டிதனை ஒத்திருந்த யான் - ஒட்ட
எறும்புக்கு நொய்யரிசி இட்டேன் அதனால்
சிறிதுபொருள் ஈந்தான் சிவன்''

''அப்பொருளைக் கொண்டே அடியார்க்கு
அன்னமிட்டேன்
ஒப்பிலான் அதனால் உளம்உவந்தே - இப்பாரில்
அளகேசன் என்றே உலகோர் அதிசயிக்க
அளவிலாப் பொருள்ஈந்தான் அவன்''

எனவரும் பாடல் கருத்துக்களைச் சிந்திக்கும் யாவரும் அன்னதான மகிமையை நன்குணர்வர் என்பது திண்ணம்.

மகாபாரத்தில் அன்னதான மகிமையை உணர்த்தும் வகையில் ஒரு நிகழ்ச்சி கூறப்படுவதும் இங்கு நாம் எண்ணி மகிழத்தக்கது. கொடுத்துச் சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரனான கர்ணன், தம் புண்ணியம் அனைத்தையும் கூட தானம் செய்து, அத்தகைய புண்ணியத்தால் சொர்க்க வாழ்வைப் பெறுகின்றான். சொர்க்கத்தில் சேர்ந்தவர்களுக்கு 'தேவாமிர்தம்' வழங்கப் பெறுவதால் பசி உண்டாகாது. ஆனால் தேவாமிர்தம் அருந்தியும் கர்ணனுக்குப் பசியுணர்வு உண்டாகின்றது.

''ஏன் எனக்குப் பசி உண்டாகிறது?'' என்று கர்ணன் வினவுகின்றான். ''நீ உன்னை நாடி வந்தோர்க்கு எல்லாம் பொன்னையும், பொருளையும் வாரி வாரி வழங்கினாயே தவிர, அன்னதானம் செய்தது இல்லை. ஆகவே உனக்குப் பசி உணர்வு உண்டாகிறது'' என்று கர்ணனுக்கு விளக்கம் தரப்படுகின்றது.

''அப்படியானால் என் பசி தீர வழியே கிடையாதா?'' என்று வருத்தத்துடன் கேட்கின்றான் கர்ணன்.

''ஒரு வழி இருக்கிறது. நீ அன்னதானம் செய்யா விட்டாலும், பசியோடு வந்த அடியார் ஒருவருக்கு ''அதோ! விதுரர் மாளிகையில் அன்னதானம் நடக்கிறது. அங்கே செல்லுங்கள்'' என்று கைகாட்டி இருக்கிறீர்கள். ஆகவே அந்தச் சுட்டுவிரலைச் சிறிது நேரம் உன் வாயில் வைத்துச் சப்பிக் கொண்டால் உன் பசி நிரந்தரமாகத் தீரும்'' என்றும் கர்ணனுக்கு விளக்கம் கூறப்பட்டது.

இந்த இதிகாச நிகழ்ச்சியினால் நாம் அன்னதான மகிமையை நன்கு அறிந்துகொள்ளலாம்.

ஆகவேதான் நம் புண்ணிய பாரதத் திருநாட்டில் அதிலும் குறிப்பாக நம் தமிழ்த் திருநாட்டில் தோன்றிய

அருளாளர்கள் யாவரும் அன்னதானம் இயன்ற அளவு ஆற்றுமாறு அறிவுறுத்தியுள்ளார்கள்.

''வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கு
என்றும்
நொய்யிற் பிளவுஅள வேனும் பகிர்மின்கள்
நுங்கட்கு இங்ஙன்
வெய்யிற்கு ஒதுங்க உதவா உடம்பின் வெறுநிழல்
போல்
கையிற் பொருளும் உதவாது காணுங் கடைவழிக்கே.''

''பொருபிடி யுங்களி றும்விளை யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல சண்முக வாவெனச் சாற்றிநித்தம்
இருபிடி சோறுகொண்டு இட்டு உண்டுஇரு
வினையோம் இறந்தால்
ஒருபிடி சாம்பருங் காணாது மாயஉடம்பிதுவே.''

என அருணகிரிநாதர் கந்தர் அலங்காரத்தில் **''நொய்யிற் பிளவு அளவேனும் பகிர்மின்கள்''** எனவும் **''நித்தம் இருபிடி சோறு கொண்டு இட்டு உண்டு இரு''** எனவும் அன்னதான அறத்தையே பெரிதும் போற்றியிருக்கக் காணுகின்றோம்.

அன்னதானத் திட்டம் புண்ணியம் வளர்க்கும் திட்டம் மட்டும் அல்ல. மனிதநேயம் வளர்க்கும் மகத்தான திட்டம்.

''மனிதர் உணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ?''

என்றார் உலக மகாகவிஞரான பாரதியார். பசி வருத்தம் வாட்டும் பகல் நேரத்தில் சாதி, குலம் பாராது பக்தர்களுக்கு அன்னம் இடுவது மனிதநேயம் வளர்க்கும் மகத்தான திட்டம் என்பதில் ஐயமில்லை.

ஆகவேதான் திருக்கோயில்களில் மகத்தான ''அன்னதானத் திட்டம்'' தொடங்கப்பட்டுள்ளது.

யானைக்கு உணவானது ஊட்டப்படும்போது அதனுடைய ஒரு கவளம் தவறிக் கீழே விழுமானால் அதனால் யானைக்கு ஒன்றும் துன்பம் இல்லை. யானை சிந்திய ஒரு கவளஞ் சோறு சிற்றெறும்புகள் ஒரு கோடி பசியாறப் பயன் தருவதைப் போல நன்கொடையாளர்கள் - பக்தர்கள் அன்னதான உண்டியில் வழங்கும் செல்வம் - அன்னதான அறக்கட்டளைக்கு வழங்கும் வைப்புத் தொகை பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் - பசியாறப் பயன் தரும் என்பது உண்மை.

''வாங்கும் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறா - ஆங்கதுகொண்டு
ஊரும் எறும்பிங் கொருகோடி உய்யுமால்
ஆருங் கிளையோடு அயின்று.''

என்ற குமரகுருபரரின் நீதிநெறி விளக்க அறிவுரைக்கு ஏற்ப செல்வம் படைத்த நன்கொடையாளர்களும் பக்தர்களும் இப்புண்ணிய அன்னதானத் திட்டத்தில் பங்கேற்க வேண்டும்.

''மன்னுயிர்க்கு உறுவதே செய்து வைகினேன்
என்னுயிர்க்கு உறுவதும் செய்ய எண்ணினேன்''

என்று இராம காவியத்தில் தசரதர் கூறுவதைப் போல நம் குழந்தைகளுக்கும் சுற்றத்தார்க்கும் ஆக நாம் பலவழிகளிலும் பொருளைச் செலவழிப்பதுபோல, நமக்குப் புண்ணியம் வழங்கி நம்மைக் கடைத்தேற்ற வல்ல அன்னதான அறக்கட்டளைக்கும் நம்மால் இயன்ற அளவு வைப்புத் தொகையாகத் திருக்கோயில் களுக்கு வழங்கி, அவ்வைப்புத் தொகையின் வட்டித் தொகையைக் கொண்டு நம் பிறந்தநாள், நம் பெற்றோர் பிறந்தநாள் - அல்லது குறிப்பிடத்தக்க ஒரு நன்னாளில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கிடும் வகையில் இத்திட்டத்தில் பல்லோரும் பங்கேற்றுப் புண்ணி யம் பெற வேண்டும்.

"அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே; விழிஅம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே; விம்மி விம்மி இரு
கைத்தலம் மேல்வைத்தழும் மைந்தரும் சுடுகாடு
மட்டே
பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே''

என்ற பட்டினத்தாரின் வாக்கினைப் பொன்னெனப் போற்றி நம் புண்ணியம் வளர்க்கும் பொருட்டும், பாவத்தைப் போக்கும் பொருட்டும், மனித நேயத்தை வளர்க்கும் பொருட்டும் மண்ணினில் பிறந்த வாழ்வின் பயனை நாம் பெற்று இன்புறும் பொருட்டும் அன்ன தானத் திட்டத்தில் பங்கேற்பது மிகுந்த புண்ணியம் வழங்கும் என்பதற்கு ஏதும் ஐயம் இல்லை.

''நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்''
- மகாகவி பாரதியார்

அனைவரும் இம் மனிதநேய மகத்தான அன்னதான அறப்பணியில் ஈடுபட வாரீர்! வாரீர்! வாரீர்!

★ ★ ★

# சீத்ரபானுவே வருக! வருக!!

– திருமதி ஏ. பட்டம்மாள் ஆனந்த



*சித்திரத்தின் ஓவியமே! சித்ர பானுவே*
*முத்திரை பதித்திடவே பானுவாய் ஒளிர்வாயே*
*சித்திரை ஞாயிறில் உதித்த ப ானுவே*
*பத்திரமாய் ஞாலத்தை காத்திடவே வந்திடுவாய்!*

*சீர்மிகு புத்தாண்டில் வரப்புயர நீருயர்ந்து*
*நீர்உயர நெல்உயர்ந்து நெல்உயரக் குடிஉயர்ந்து*
*பார்முழுதும் பாரதத்தின் பீடுயர்ந்து சிறப்புயர்ந்து*
*பேர்பெற்றுப் புகழ்பெறவே புத்தாண்டே வந்திடுவாய்!*

*இருவினை அகற்றி அருள்ஒளிபரப்பும் சுடரே!*
*அருமறைகளை நினைந்து மனுநெறியில் நடக்க மெய்*
*பொருளுணர்த்தும் சிற்பிரகாசமய சித்ர பானுவே!*
*திருவருள்கூடி வல்வினைபோக்கும் திருவே வந்திடுவா*

*மூவிருபது ஆண்டதனில் ஒன்றாய் இருப்பவளே*
*தீவிரவாத மென்னும் தீய நோயதனால்*
*ஈவிரக்க மின்றி ஈனத்தொழில் புரிவோரை*
*தீவிரமாய் அகற்றிடும் ஆரிணியே வந்திடுவாய்!*

*ஜன சேவையே ஜனார்த்தன சேவையென*
*தினந்தோறும் தினகரனாய் கடமையினைச் செய்தருள*
*மனம் தனை அடக்கி மும்மதமும் தான்அடங்க*
*ஞானம் தான் அளிக்கும் ஞாயிறே வந்திடுவாய்!*

*நிலநடுக்கம், நீர்ப்பெருக்கென்று இயற்கையின் உற்பாதமின்றி*
*கலகம் சண்டையின்றி உலகம் உய்ந்திடவே*
*மலம்ஒரு மூன்றின் மயக்கம்தனை அறுத்து*
*வலம்வந்து இறையருளைப் பெற்றிடவே வந்திடுவாய்!*

# அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயில்

– வி. இராஜசேகரன், விருத்தாசலம்


அருள்மிகு கொளஞ்சியப்பர் ஆலயம், கடலூர் மாவட்டம் - விருத்தாசலம் வட்டம் - மணவாளநல்லூர் என்னும் சிற்றூர் எல்லையில் அமைந்துள்ளது. வர லாற்றுச் சிறப்பு மிக்க ''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே'' முன்னதே தோன்றிய முதுகுன்றம் என்று போற்றப்படும் பெருமை மிக்கதும், அப்பர் - சம்பந்தர் - சுந்தரர் ஆகிய மூவரால் பாடப்பெற்ற தொன்மை மிக்கதுமாகிய, விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரர் ஆல யத்திற்கு, மேற்கே, சேலம் பெருவழிச் சாலையில் 3 கல் தொலைவில் காவல் தெய்வமாக அமைந்துள்ளது மேலும் ஒரு சிறப்பிற்குரிய செய்தியாகும். இத் திருக் கோயில் மாவட்டத்திலேயே முதல் நிலைப் பட்டி யலில் இடம் பெற்றிருப்பது, மேலும் ஒரு சிறப்பைத் தன்பக்கம் சேர்த்துக் கொண்டுள்ளது என்று கூறலாம்.

இக்கோயிலின் மூலவிக்கிரகம், அருவமும் இல் லாமல், உருவமும் இல்லாமல் பீட சுயம்பு வடிவமாக இருப்பதுதான், இவ்வளவு மகிமைக்கும் காரணம் என்று விக்கிரக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். பழங் காலத்தில் இந்த இடம் மரம், செடி, கொடிகள் அடர்ந்த காடாக இருந்தது என்றும், இதன் உள் சென்று, ஆடு, மாடுகள் மேய்ந்து வரும் என்றும், இந்த வழக்கப்படி ஒரு நாள் மேயச் சென்ற, கறவைப் பசு ஒன்றைக் காணாமல், அதைத் தேடிச் சென்ற சிறுவன், இந்த காட்டுக்குள் சென்று கறவைப் பசு பால் சொரிந்து கொண்டு நின்றதைப் பார்த்துவிட்டு, ஊர் மக்களிடம் ஓடிவந்து, இந்த அதிசயத்தைச் சொல்ல, ஊர்மக்கள் திரண்டு போய் அந்தக் காட்சியைக் கண்டு, அதிசயப் பட்டு, அந்த இடத்தைச் சுத்தம் செய்து பார்த்தபோது, இந்த சுயம்பு வடிவம் தென்படவே, அன்று முதல் இதை ஒரு அதிசய வழிபாட்டுத்தலமாக எண்ணிப் பயபக்தியுடன் வழிபட்டு வந்துள்ளார்கள் என்பதும் செவி வழிச் செய்தி ஆகும். இவ்வளவு மகிமையுடன் விளங்கும், இந்த ஸ்தலம், சித்தர்கள் அடக்கமான இடமாக இருக் கலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருகிறார்கள், இதுவன்றி அறுதியிட்ட வரலாறு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த சுயம்பு வடிவம் கொளஞ்சி மரத்தின் கீழ் இருந்ததால், கொளஞ்சியப்பர் என்று போற்றியும் ''செத்துப்பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளா'' என்று முருகனைப் பிள்ளைத் தமிழில் குமரகுருபரர் பாடி யிருப்பதையும், ''குரங்குலாவும் குன்றுறை மணவாளா'' என்று முருகப்பெருமானை அருணகிரிநாதர் பாடி யிருப்பதையும் பார்த்தால் மணவாளன் என்ற பெயர் முருகனுக்குரியது என்று புலப்படுகிறது. எனவே மணவாள நல்லூரில் அமர்ந்தது இந்த சுயம்பு. முருகக் கடவுள்தான் என்று உறுதிப்படுத்தி, முருகப் பெரு மானே கொளஞ்சியப்பர் பேரால் அருள்பாலிக்கின்றார் என்று வணங்கியும், வழிபட்டும் வருகிறார்கள். பிரார்த் தனை செய்து கொளஞ்சியப்பரின் திருவருளைப் பெற்ற, இந்த வட்டாரத்தில் உள்ள பக்தர்கள் தங்கள் ஆண்மகவுக்கு கொளஞ்சிநாதன் என்றும், பெண் மகவுக்கு, கொளஞ்சியம்மாள் என்றும் பெயர் சூட்டி மகிழ்கிறார்கள். கொளஞ்சியப்பரின் அருள் பாலிப் புக்கு, இந்த வட்டாரத்தில் இந்தப் பெயருடைய வர்கள் அதிகமாகக் காணப்படுவதே ஒரு எடுத்துக்காட் டாகும்.

நாளடைவில் கருவறை, மகா மண்டபம், குதிரை, சுற்று மண்டபம், உற்சவ மண்டபம், நான்குபுறச் சுற்றுச் சுவர்கள், ராஜகோபுரம் என்று திருக்கோயில் வளர்ந்து நின்று வருவோரை வரவேற்கிறது. மேலும், திருமண மண் டபம், கருணை இல்லம், விருந்தினர் மாளிகை, பக்தர் கள் தங்கும் விடுதி என விரிவு பெற்று விளங்குகிறது.

அருள்மிகு கொளஞ்சியப்பருக்கு ஆண்டுதோறும், பங்குனி உத்திரத்தில் பத்து நாட்கள் பெருவிழா கொண்டாடப்படுகிறது. அந்நாட்களில், கொளஞ்சி யப்பர் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி அலங் காரத்துடனும், கம்பீரத்துடனும் உலாவரும் காட்சிக் கண்கொள்ளாக் காட்சியாகும். ஒன்பதாம் நாள் தேர்த் திருவிழா நடைபெறுகின்றது. பத்தாம் நாள் உத்திர




திருவிழா அன்று இலட்சக்கணக்கான பக்தர்கள் காவடி ஏந்தியும், கரகம் சுமந்தும், முருகா முருகா என ஆடியும், பாடியும் வலம் வரும் காட்சி, பார்ப்பவர்களைப் பரவசம் ஊட்டும் நிகழ்ச்சியாகும்.

மேலும் மாதந்தோறும், கிருத்திகை, சஷ்டி போன்ற நாட்களிலும் மற்றும் வெள்ளிக் கிழமைகளிலும் பக்தர்கள் கூட்டம் பெருகி அலைமோதுகின்றது. இவ்வாலயத்தில் தினமும் காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை பக்தர்கள் வழிபடவும், பிரார்த்தனை செய்து வேண்டிக் கொள்ளவும், தக்க ஏற்பாடுகளை ஆலய நிர்வாகம் சிறப்பாகச் செய்து செயல்பட்டு வருகிறது.

**பிரார்த்தனை தலம்**

பக்தர்களின் வேண்டுகோள் முறையாக இருப்பின் பிரார்த்தனை முற்றிலும் நிறைவு பெறுகிறது என்பது பக்தர்களின் கருத்து.

பிரார்த்தனையில் பயன்பெற்றவர்கள், ஆடு, மாடு போன்ற கால்நடைகளையும் நெல், கம்பு போன்ற தானியங்களையும், கோழி, மயில் போன்ற பறவைகளையும் பலன் பெற்றதற்குக் காணிக்கையாக ஆலயத்தில் கொண்டு வந்து செலுத்தி மகிழ்கிறார்கள்.

வாழ்நாளில் தீர்க்கமுடியாத வழக்குகள், இவ்வாலயத்தில் பிராது செய்து, சம்மனுக்குப் படிகட்டி ரசீது பெற்றுக் கொண்டால் 3 வாரம் அல்லது 30 நாளில் பிராது செய்தோர் வெற்றி பெறுகிறார்கள். இதை வழக்கறிஞர்களும், நீதிபதிகளும் வியப்பாகக் கருதி அருள்மிகு கொளஞ்சியப்பரை வழிபட்டு வரு கிறார்கள்.

குழந்தைகளுக்கு மொட்டையடித்துக் காது குத்தல், காப்பிடுதல், திருமணம் செய்தல் போன்ற மங்கல நிகழ்ச்சிகள் நாள்தோறும் நடைபெற்று வரு கின்றது. இந்நிகழ்ச்சிகள் நன்றாக நடைபெற ஆலய நிர்வாகம் நல்ல ஏற்பாட்டினை செய்து வருவதுடன் ஆதரவு அற்ற குழந்தைகளுக்கு உணவு, உடை, உறை யுள் மூன்றையும் கொடுத்து அக்குழந்தைகளை கல்வி யில் மேம்படச் செய்து ஆண்டுதோறும் சுமார் 3 பிள்ளைகளை நன்றாகப் பாதுகாத்து, நாட்டுக்கு அர் பணிக்கும் நற்பணியினை இங்கு அமைந்திருக்கும் கருணை இல்லம் செய்து வருகிறது.

எனவே மக்கள் அனைவரும் பிரார்த்தனை ஸ்தல மாகிய அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயி லுக்கு வந்து, பிரார்த்தனை செய்து வழிபட்டு, இம்மை குரிய பொருட் செல்வத்தையும், மறுமைக்குரி அருள் செல்வத்தையும் பெற்று வையத்து வாழ்வாங்கு வாழ வேண்டும் வாழ வேண்டும் என்று கொளஞ் சியப்பரை எண்ணி, வேண்டி விரும்பி வாழ்த்து கிறேன்.

மேலும் வெள்ளி திருத்தேர் பணி சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்றது. வாசகர்களும், பக்தர்களும் தங் ளால் ஆன பணம் மற்றும் வெள்ளிகளை காணிக்கை யாக திருக்கோயில் செயல் அலுவலரிடம் செலுத்தி இறைவன் அருளை பெற வேண்டுகின்றேன்.

★ ★ ★

# பெரிய புராணச் சிறப்பு

– டாக்டர் சிவப்பிரியா, தில்லிப் பல்கலைக் கழகம்

கடவுளை நேரில் கண்டு வாழ்ந்த ஜீவன் முத்தர்களும், கடவுளின் பேரருளைப் பெற்ற தெய்வீக அருளாளர்களும் அருளிச் செய்த புனித நூல்களுக்குத் திருமுறை என்று பெயர். இந்தப் புண்ணிய நூல்கள் ஆன பன்னிரண்டு திருமுறைகளில் மிகப் பழமையானது திருவாசகம். இறுதியில் உண்டானது பெரிய புராணம் - நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம், சூரியன், சந்திரன், ஆத்மா என்ற எட்டு பொருட்களாகவும் ஒரு சேர விளங்கும். சிவபரம் பொருளின் அஷ்டமூர்த்தி (எட்டுருவம்) போன்று நால்வர் அருளிச் செய்த அதிசய தேவாரமும், மாணிக்க வாசகமும் எட்டு திருமுறைகளாக உள்ளன. திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது அருளாளர்கள் அருளிச் செய்த துதிகள் ஒன்பதாம் திருமுறையாக உள்ளன. அஷ்டமா சித்திகளைப் பெற்ற திருமூல முனிவர் இயற்றிய திருமந்திரம் என்னும் ஆகம நூல் பத்தாம் திருமுறையாக உள்ளது. காரைக்கால் அம்மையார், சங்கப்புலவர்கள், சேர பல்லவ மன்னர்கள், நம்பியாண்டார் நம்பி போன்ற பதினோரு பக்திப் புலவர்கள் பாடியவை பதினோராம் திருமுறையாக உள்ளன. தெய்வத்தமிழ்ச் சங்கப் புலவர்கள் சிவப்பரம்பொருளையே தலைமைப் புலவாராகக் கொண்டிருந்த காரணத்தால் சொக்கநாதரின் திருமுகப்பாசுரம் பதினோரம் திருமுறையின் தலைமைப் பாடலாக உள்ளது. பன்னிரண்டாவது திருமுறையாகப் புகழப் பெறுவது சேக்கிழார் பாடிய பெரிய புராணம் என்னும் பக்திக் காவியம்.

அரசனிலிருந்து ஆண்டி வரை, அந்தணர்களிலிருந்து புலையர் வரை தமிழ்நாட்டிலே திருத்தொண்டு செய்து வாழ்ந்து புகழ்பெற்ற பக்தப் பெருமக்களின் தூய வாழ்க்கை வரலாற்றை விளக்கும் பெரிய புராணத்திற்குச் சேக்கிழார் வைத்த பெயர் 'திருத்தொண்டர் மாக்கதை' என்பதாகும்.

தொண்டர்களின் பெருமையைப் பேசுவது தான் உலகிலேயே மிகப் பெரியது என்று ஔவையார் கூறுகின்றார்.

"தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்பது ஔவையின் வாக்கு. சேக்கிழாரின் திருத்தொண்டர் மாக்கதை என்ற அற்புதக் காவியம் அறவோர்களாகிய திருத்தொண்டர்களின் பெருமையைப் பேசும் மிகப்பெரிய செயலைச் செய்த காரணத்தால் பெரிய புராணம் என்று போற்றப்பட்டுப் புகழ் பெற்றது. பண்பிலும் பக்தியிலும் ஒழுக்கத்திலும் உயர்ந்து வாழ்ந்த பெரியோர்களின் புகழ் பேசிய காரணத்தாலும் பெரிய புராணம் என்று அழைக்கப்பட்டது.

"அளவு கடந்த புகழ் பெற்ற தொண்டர்களின் பெருமையை எடுத்துச் சொல்வது முடியாத செயல். இருந்தாலும் அவர்களது புகழைப் பேச வேண்டும் என்ற அளவு கடந்த ஆர்வத்தின் காரணமாக தொண்டர்களின் வரலாற்றைச் சொல்லுகின்றேன்" என்று பெரிய புராணம் தோன்றியதற்கான காரணத்தைச் சேக்கிழார் கூறுகின்றார்.

இலக்கியச் சான்றுகள், அகச் சான்றுகள், கல்வெட்டுச் சான்றுகள், சரித்திரச் சான்றுகள் ஆகியவற்றைக் கொண்டு தமிழ்ப் பெருமக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை உள்ளபடி விளக்கும் வரலாற்றுக் காவியமாக உள்ள காரணத்தால் பெரிய புராணம் முழுவதும் தாமிரத் தகடுகளில் பொறிக்கப்பட்டது. தில்லைக் கோயிலுக்குப் பொன்வேய்ந்த அநபாய சோழன் பெரிய புராணம் முழுவதையும் செப்பேடுகளில் எழுதிவைத்து சேக்கிழாரின் உண்மையையும் நேர்மையையும் பாராட்டினான் என்பர்.

தமிழ்நாட்டில் மேல் தளத்திலிருந்து அடித்தளம் வரை சமுதாயத்தின் அனைத்து வகைப் பக்தப் பெருமக்களின் உன்னத வாழ்க்கை வரலாற்றை விளக்குவதால் பெரிய புராணம் தமிழ் மக்கள் காப்பியமாகவும், சமுதாயம் முழுவதையும் ஒரே நூலில் பாடும் சமுதாயக் காவியமாகவும், ஒற்றுமை வளர்க்கும் சமத்துவக் காப்பியமாகவும் விளங்குகின்றது.

தமிழ்நாட்டின் திருத்தலங்கள், ஊர்கள், நதிகள், மலைகள் ஆகியவற்றின் அருமை பெருமைகளை பக்தியுடன் அற்புதமாக விளக்குவதால் நாட்டுப்பற்றை வளர்க்கும் தேசியக் காவியமாகவும், புண்ணிய பூமியின் புகழ் பாடும் புனிதக் காவியமாகவும் பெரிய புராணம் உள்ளது.

பெரிய புராணமானது 'உலகெலாம்' என்று தொடங்கி 'உலகெலாம்' என்று முடிகின்றது. சுந்தரர் வரலாற்றோடு தொடங்கி சுந்தரர் வரலாற்றோடு முடிகின்றது.

கற்பனை மாந்தர்களைக் கொண்ட கற்பனை நூலாகவோ, எவ்விதத்திலும் தொடர்பு இல்லாத அந்நியர் ஒருவரைப் பற்றிப் பாடும் ஆசைக் காவியமாகவோ இல்லாமல் பலப்பல நூற்றாண்டுகளாகப் புகழ் பெற்று வாழ்ந்து தமிழ் நாட்டிற்குத் தொண்டு செய்து சிறப்படைந்த தமிழ்ப் பெரியோர்களின் அற வாழ்க்கையை விளக்கும் உண்மைக் காவியமாக - மெய்க் காவியமாக - சரித்திரக் காவியமாக - அனுபவ காவியமாக - அறநெறிக் காவியமாக - ஆராய்ச்சிக் காவியமாகப் பெரிய புராணம் விளங்குகின்றது. தமிழ் மொழியின் பெருமை, தமிழர்களின் மரபு, கலாச்சாரம் பண்பாடு களை விளக்கும் தமிழர்க் காவியமான பெரிய புராணம் விரிநூல் வகையைச் சேர்ந்த காப்பியம். தமிழ் நாட்டின் தெய்வீக அருளாளர்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நால்வரில் ஒருவரான சுந்தரர் திருவாரூர்த் தலத்தில் திருத்தொண்டத் தொகை என்ற ஒரு பதிகம் அருளிச் செய்தார். அதில் தனக்கு முன்னும் தன் காலத்திலும் வாழ்ந்த பல்லாயிரக் கணக்கான பக்தர்களிலே அறுபத்து மூன்று பேர்களைப் பெயராலும் சிறப்புத் தொடராலும் போற்றினார். தில்லை வாழ் அந்தணர், முனிவர், சேர சோழ பாண்டிய பல்லவ மன்னர்கள் முதலாக வணிகர், வேளாளர், வேடுவர், குயவர், உழவர், இடையர், நெசவாளி, வண்ணார், மீனவர், புலையர் வரை பக்தியிலும் ஒழுக் கத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கிய அனைவரையும் ஒன்றாக ஒரு குடைக்கீழ் வைத்து எந்தவித வேறுபாடும் இல்லாமல் சுந்தரர் போற்றிப் புகழ்ந்தார். சுந்தரர் போற்றிய இந்த அறுபத்து மூன்று அடியார் களைப் பற்றி நம்பியாண்டார் நம்பி சுருக்கமாக உரைத்து ''திருத்தொண்டர் திருவந்தாதி'' பாடினார். இவர் களின் வாழ்க்கை வரலாற்றை சேக்கிழார் விளக்க மாக விரித்து உரைத்துப் பெரிய புராணம் பாடினார். இவ்வாறு ஏழை பணக்காரர், உயர்ந்தவர் தாழ்ந்தவர், ஆண், பெண் குழந்தைகள் என எந்தவித வேறுபாடும் இல்லாமல் நல்ல உள்ளம் கொண்ட எல்லா தொண்டர் களும் தொண்டர்குலம் என்ற ஒரே குலமாக விளங்கு வதால் 'திருத்தொண்டத் தொகை' என்ற அற்புதப் பதிகம் சமத்துவப் பதிகமாக விளங்குகின்றது. 'திருத் தொண்டர் திருவந்தாதி' சமத்துவ அந்தாதியாகவும் 'திருத்தொண்டர் மாக்கதை' என்ற பெரிய புராணம் சமத்துவக் காவியமாகவும் விளங்குகின்றது. இது மட்டுமன்றி

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்

என்று சுந்தரர் போற்றியுள்ளார். ஆதலால் திரு தொண்டத் தொகைப் பதிகமானது மனித இனத்திற் அப்பாற்பட்ட பக்தர்களையும், தமிழ்நாட்டிற் அப்பாற்பட்ட பக்தர்களையும் சுந்தரர் காலத்திற் அப்பாற்பட்டுப் பிறகு தோன்றும் பக்தர்களையு போற்றுவதால் உயர்திணை அஃறிணை வேறுபாடு தேசவேறுபாடு, காலவேறுபாடு என எல்லாவற்றையு கடந்து நின்று உலகம் முழுவதையும் ஒன்றாக்குகி அற்புதப்பதிகமாக விளங்குகின்றது. இவர்களை பெரிய புராணம் விளக்கிக் கூறுவதால் பெரிய புரா மானது உலகத்தை ஒரு குடைக் கீழ் ஆக்கும் உலக காப்பியமாகப் பெருமை பெறுகின்றது. இதற்கேற் பெரிய புராணம் 'உலகெலாம்' என்று தொடங் 'உலகெலாம்' என்றே முடிகின்றது. பெரிய புராணத் எழுதத் தொடங்கும் முன்பு தெய்வப் புலவர் சேக்கிழா தில்லையம்பலம் சென்று வழிபட்டார். சேக்கிழா காலத்துச் சோழ மன்னரான அநபாயனால் பொ வேயப் பெற்று புதுப்பிக்கப்பட்டுப் புதுப் பொ வுடன் ஒளி வீசும் பொன்னம்பல நடராஜனை வழிபடு போது நடராஜப் பெருமான் சேக்கிழாருக்கு உலகெலா என்று சொல் எடுத்துக் கொடுத்து அருள் புரிந்தான் ஓங்கார ஓசையை உண்டாக்கய உடுக்கை யிலிருந் பிறந்த 'உலகெலாம்' என்ற சொல்லே பெரிய புர ணத்தின் முதற்சொல்லாகவும் முடிவுச் சொல்லாகவு அமைந்தது. பொன்னம்பலவன் சொல் எடுத்து கொடுத்ததாலேயே விநாயகர் வாழ்த்துக்கும் முன் தாகவே பொன்னம்பலவன் வாழ்த்து விளங்குகின்றது.

சுந்தரர் வரலாற்றோடு தொடங்கும் பெரி புராணம் அவர் திருவாரூரில் போற்றிய அடியா களின் வரலாற்றையெல்லாம் விளக்கிச் சென்று சுந்தர காலத்து அடியவர்களோடு சுந்தரர் வரலாற்றை தொடர்ந்து சொல்லி சுந்தரர் வரலாற்றோடு முடிவ கின்றது. இவ்வாறு மிகவும் நுட்பமாக நுணுக்கமா வியக்கத்தக்க முறையில் திருத்தொண்டர்களின் வ லாற்றைச் சேக்கிழார் பாடியுள்ளார். ஆதலால் வெ வேறு காலத்தில் வெவ்வேறு ஊர்களிலே வாழ்ந் வெவ்வேறு நிலையிலுள்ள வெவ்வேறு அடியார்களி வரலாறு கூறும் நூலாக இருந்தாலும் பெரிய புரா மானது தொடர்ச்சியாக உள்ளது. இது மட்டுமின் சேக்கிழார் தம் காலத்திற்கேற்ப அடியார்களின் வ லாற்றை எழுதாமலே அந்தந்த அன்பர்களின் கால திற்கே சென்று அவரவர்களது வரலாற்றை வரை துள்ளார். சேக்கிழாரின் இந்தப் போற்றத்தக்க பண் னால் வேறு எந்த காவியத்திற்கும் இல்லாத மகத்தா மகிமையுடன் பெரிய புராணம் சிறப்படைகிறது சேக்கிழாரும் வேறு எந்தப் புலவருக்கும் இல்லா பெருமையைப் பெருகிறார் - பெரிய புராண போன்று எந்தவித வேறுபாடும் இல்லாமல் உ




திணை, அஃறிணை, ஏழை, பணக்காரர், தேவர், மனிதர் என எல்லா அடியவர்களையும் பற்றி விளக்கும் நூல் மதுரைத் திருவிளையாடல்களைப் பற்றிப் பேசும் திருவிளையாடற் புராண நூலாகும். அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் சிறு நூலாகவும் காவியமாகவும் பலரால் பாடப்பட்டுள்ளன. ஆனால் திருத்தொண்டர் வரலாறு சேக்கிழார் ஒருவரால் மட்டுமே பாடப்பட்ட தெய்வீகக் காவியமாகப் புகழ் பெற்று ஈடு இணை யில்லாமல் சிறப்புற்று விளங்குகின்றது. மதுரை தமிழ்ச் சங்கத்தில் பலப்பல காவியங்களும் புராணங்களும் மகாபாரதம் போன்ற தழுவல் நூல்களும் இயற்றப் பட்டு இருந்தன. ஆனால் அவையெல்லாம் சமண மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் அழிக்கப்பட்டு விட்டன. அந்நியர்களின் ஆட்சியில் தமிழ்ச் சங்கமும், தமிழ்ச் சங்கக் காவியங்களும் அழிக்கப்பட்ட பிறகு தோன்றிய காவியங்களில் மிகப் பழமையானது பெரிய புராணம் மட்டுமே. சிலப்பதிகாரம் மணிமேகலை, சீவக சிந்தாமணி போன்ற கற்பனைக் காவியங்களும், திரு விளையாடற் புராணமும், கம்பராமாயணம் போன்ற வடமொழிக் காவியங்களின் தழுவல் நூல் களும் பெரிய புராணத்திற்குப் பிறகு தோன்றியவை யாகும். அதனால் பெரிய புராணமானது பழைய பொய் யாகப் புகழ்ந்து பேசாமல் கடவுளை நேரில் கண்டு வாழ்ந்த அருட்செல்வர்களின் வரலாறு விளக்கும் தெய்வீகக் காவியமாதலால் பெரிய புராணமானது தேவாரம் திருவாசகம் போன்ற புனிதத் தெய்வத்திரு நூலாகப் பெருமை பெறுகின்றது. சேக்கிழார் மெய்ப் பொருளை மெய்யாக உணர்ந்து மெய்யாக எழுதிய மெய்யடியவர் ஆவார். ஆதலால் சேக்கிழாரும் திருக் கோயில்களில் எழுந்தருளுவிக்கப் பெற்று வழிபடப் படுகின்றார்.

★ ★ ★

# திருவேட்டீசுரம்

- திருமதி இராஜேஸ்வரி விஸ்வநாதன்

சென்னையம்பதியைச் சேர்ந்த திருவல்லிக் கேணியில் உள்ளது இத்திருத்தலம். சைவசமய குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசு நாயனாரின் காப்புத் திருத்தாண்டகத்தில் இத்தலம் பாடப்பட்டுள்ளது.

''தெண்ணீர் புனற்கெடில வீரட்டமுஞ் சீர்காழி வல்லந்
திருவேட்டியும்
உண்ணீரார் ஏடகமும் ஊறல் அம்பர் உறையூர்
நறையூர் அரணநல்லூர்
விண்ணார் விடையான் விளமா வெண்ணி மீயச்சூர்
வீழிமிழலை மிக்க
கண்ணார் நுதலார் கரபுரமுங் கபாலியாரவர்
தங்காப்புகளே''

அருள்மிகு பார்த்தசாரதி பெருமாள் திருக்கோயில் அமைந்துள்ள திருவல்லிக்கேணியைச் சார்ந்தது திருவேட்டீச்சுரர் பேட்டை தலமாகும். இத்தலம் தேவார வைப்புத் தலங்களுள் ஒன்றாகும். வேங்கடாசலம் பிள்ளை என்பவரால் 100 ஆண்டுகட்கு முன் தலபுராணம் பாடப்பெற்று, பின் 1976-ஆம் ஆண்டு நல்முருகேச முதலியார் அவர்களால் மூலமும் உரையும் எழுதப்பெற்று தலபுராணம் வெளியிடப்பட்டிருக்கிறது.

திரு + வேட்டல் + ஈசுரர் = இந்த நாமத்தில் முதல் தொடரில் 'திரு' என்ற சொல் மங்கலச் சொல்லாகவும், 'இலக்குமி'யின் பெயரைக் குறிப்பதாகவும் உள்ளதைக் காணலாம்.

இத்தலத்தின் இலிங்க மூர்த்தியின் முடியின் மேற்புறம் ஒரு பிளவு காணப்படுகிறது. இது அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெறத் தவம் செய்த போது, இறைவன் வேடுவ ரூபத்தில் வந்ததை அர்ச்சுனன் உணராமல் வில்லால் இறைவனை அடித்ததால் இந்த தழும்பு ஏற்பட்டது என்று பெரியோர்கள் கூறுவர். இதை உ.வே. சுவாமிநாதையர் அவர்களும் விளக்கியுள்ளார்கள். இலிங்கம் பார்த்தனால் பிளவுபட்டதால் (வெட்டுப்பட்டதால்) திருவேட்டீச்சுரம் என்றும் கூறுவர்.

திரு என்பது இலக்குமியைக் குறிக்கிறது. மலர் மங்கை இலக்குமி தேவி, பெருமாளை மணம்புரிய இங்கு இறைவனை நோக்கி தவம் புரிந்ததால் இத்தலத்திற்கு திருவேட்டகம் என்ற திருநாமம் உண்டாயிற்று. இதற்குச் சான்று பிருந்தாவன க்ஷேத்திரமான திருவல்லிக்கேணி என்ற மங்களாசாசனம் பெற்ற தலம் அண்மையில் இருப்பதே ஆகும். இங்கே மகாலட்சுமி தவம் செய்து திரு வேங்கட கிருஷ்ணனை மணம் புரிந்ததால் திருவேட்டகம் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. வேட்டகம் என்றால் பிறந்ததும், பிறந்த வீடு என்ற பொருள் உண்டு. அன்னை சக்தியை கிருஷ்ணசோதரி என்பதுபோல், சிவனை ஸ்ரீவிஷ்ணுவின் மைத்துனன் என்பது போல், மகாலட்சுமியும் சிவச்சகோதரி என்றால் மிகையாகாது.


இத்தலம் மிகவும் பழமையானதாகும். தேவார காலத்திலேயே அதாவது 7-ஆம் நூற்றாண்டிலேயே இருந்துள்ளது. இடைக்காலத்தில் செண்பகப்புதரில் மறைந்திருக்கலாம். ஒரு பசுவானது தினமும் புதரில் தானே பாலைச் சொரிந்து வந்துள்ளது. இதைக் கண்டவர்கள் புதரை விலக்கிப் பார்த்தபோது சுயம்புலிங்கம் இருப்பதைக் கண்டார்கள்.

ஆர்க்காடு நவாப் காலத்தில் வேண்டிய மான்யங்கள் தரப்பட்டு இத்தலம் விருத்தியடைந்ததாகச் சொல்லப்படுகிறது. இன்றும் அர்த்த சாம பூஜைக்கு பால், புஷ்பம் சமர்ப்பிக்க ஆர்க்காடு நவாப் பரம்பரையினரின் கட்டளை நிலவி வருகிறது. இத்தலம் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

சமீபகாலத்தில் பாடிய அருட்கவி ஸ்ரீ சாதுராம் சுவாமிகள் அருளிய திருவேட்டீச்சுவரத் தலப் பாடலிலிருந்து,

''தமிழ்த்தாத்தா சாமிநா தையர்தலை தாழ்த்திய
அமிழ்தமே! போர்ச்சண்பகம்பா! - குமிழ்மூக்குக்
கோகுலமே! வேட்டீசன் பேட்டைக் குலவிளக்காம்
நீகிலமாக் காதாள்! முன்நின்று''

இதனால் டாக்டர் உ.வே. சுவாமிநாதையர் அவர்களும் இத்திருத்தலத்தைப் பற்றி பாடியுள்ளார்கள் என்பது விளங்குகிறது.




தலச்சிறப்பு

கண்களொரு மூன்றுடையான் கார்த்தனுக்கே
யன்புடையார்

நண்பமைந்த செல்வத்திரு வேட்டீசன் சந்நிதியால்
தண்ணமைந்த தாமரையும் முளைத்ததொரு
தடாகமுமே
விண்ணமைந்த சிவலிங்கம் ஒன்றுளதுகேண் மின்காள்!

- திருவேட்டீச்சுவரர் புராணம்

அன்புடையார் சூழ்ந்துள்ள தலம் திருவேட்டீச்சுவரர் தலமாகும். சந்நிதியில் தாமரைத் தடாகமும் விண்ணமைந்த சிவலிங்கமும் உடையன. தலத்தின் தீர்த்தம் சண்பக ஓடை. இரண்டுக்கும் மேன்மையான மூர்த்தி, தீர்த்தக்கரையில் வீடுதரும் நாயகனும், பரிவான செண்பகவல்லித் தாயாரும் வீற்றுள்ளனர். பவ்வம் என்ற எவ்வம் போகும் இத்தெய்வத் தலம் தீதில் லாதது. பிறந்திறவா பேரின்பக் கதியளிப்பது என்னும் புகழை உடையது. சுயம்புலிங்கம் பதனோரு நித்திய லிங்கத்தின் மகிமையை உடையது.

இத்தலத்தில் தலப்பெயரேசுவாமிக்கு வழங்கப் பட்டு வருகிறது. திருவேட்டீச்சுவரர் என்ற திருநாமத்தைத் தவிர வேறு நாமங்கள் இல்லை.

''காலநன் குணர்ந்த செண்பக கமல மலரோடை தன்னில்
மேலாகிப் பொருந்தி நின்ற மேன்மையாந்
தீர்த்தம் பாங்கர்
சாலவு மிடற்று முக்கண் சத்சிதா வறிவானந்த
மூலமா விளங்கு மொன்று முளைத்ததை
மொழியலுற்றாம்''

- தலபுராணம்

இத்தகைய சிறப்புப் பெற்ற இத்தலத்தில் சச்சிதானந்தமான மூலலிங்கம் சுயம்பு மூர்த்தியாகத் தோன்றி அருள்பாலிக்கிறார். கயிலை, வெள்ளியங்கிரி, கேதாரம், வாரணாசி ஆகிய இடங்களைச் சார்ந்த சிறப்புகள் எல்லாம் இங்கு எழுந்தருளியுள்ள சுயம்புலிங்கத்திற்கும் கூறப்படுகின்றது.

சென்னையைச் சார்ந்த திருவல்லிக்கேணி அமர்ந்த திருவேட்டீச்சுவரர் பெருமையைச் சொல்லவும் முடியுமோ? மயிலையில் வாழ்ந்த வேளான் வள்ளல் சமுத்திர முதலியார் அவர்கள் ஈங்கு ஈனமில் ஸ்திர லிங்கத்தை முறைப்படி உலகத்தோர் வணங்க பிரதிட்டை செய்தார். இவ்வாறு சிவனது அடையாளம் நிலை பெறவே கிளை கிளையான தரணியார் இன்றும் கண் காணத் தொழுது நலம் பெறுகிறார்கள். இச்சிவலிங்கம் சுயம்புருவாய், ஞானச் சோதியாய் சிந்தையில் எவரெவர்க்கும் அருள் பாலிக்கிறது. சிவமூர்த்தியின் பாகத்

தில் உடன் இருப்பவர் செண்பகத்தாய். அம்பாள் செண்பகவனத்தில் தவம் புரிந்து பெருமானை மணந்த தால் செண்பகவள்ளி என்ற திருநாமம் உண்டாயிற்று. இப்போதுள்ள திருவுருவம் செண்பக ஓடையில் சுயம்புவாகக் காணப்பட்டதென்பர்.

திருவேட்டீச்சுரத்தைக் கோயிலாகக் கொண்ட தேவதேவன் பருமணி நாகரத்தினப் பாம்பை அணிந்த வன். கண்டத்தில் கருவிஷத்தைத் தரித்தவன், கருதுதற்கு அரியவன். திருவானில் சிறந்த தேவதேவன்.

செண்பக ஓடையே தீர்த்தமாகக் கொள்ளப் பட்டது. இப்போது இது திருக்குளமாக உள்ளது.

தலவிருட்சம் சண்பக மரமாகும்.

## திருக்குட நீராட்டு விழா

சென்னை, திருவல்லிக்கேணி, திருவேட்டீச் சுவரன் பேட்டையில் உள்ள இவ்வருள்மிகு செண்ப காம்பிகை உடனாய அருள்மிகு திருவேட்டீச்சுவரர் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் அண்மையில், விஷு வருடம், தைமாதம், 22ஆம் தேதி (4.2.2002) திங்கட்கிழமையன்று நடைபெற்றது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரசுவதி சுவாமிகள், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரசுவதி சுவாமிகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் சிவனடியார்கள் முன் னிலையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

வேத ஆகம வேள்விகளோடு
பாதம் பற்றவே பணிந்து வணங்க
தீதிலா விஷுவிலே திருப்பணி செய்து தை
மீதிலே திருக்குட முழுக்கு செய்தனர்

இந்த மஹா கும்பாபிஷேக விழாவிற்கு பன்னிரு திருமுறை மன்றம் ஏற்பாடு செய்திருந்தார்கள். இத்திருக்கோயில் தமிழ்நாடு அரசு, இந்துசமய அற நிலைய ஆட்சித்துறையின் ஆளுகைக்கு உட்பட்டது.

## திருக்கோயிலின் அமைப்பும் சிறப்பும்

திருவல்லிக்கேணி, திருவேட்டீச்சுவரன் பேட்டை யில் உள்ள சன்னிதித் தெருவில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. நுழைவுவாயிலில் இராஜகோபுரம் உள்ளது. கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என் பார்கள். எனவே இராஜகோபுரத்தை வணங்கி உள் நுழைந்து துவஜஸ்தம்பம் என்கிற கொடிமரத்தினடி யில் நின்று வணங்கிவிட்டு முதலில் அருள்மிகு விநாயகரை வணங்கி வழிபடுதல் வேண்டும். நந்திகே சுவரரையும் வணங்கிப் பின் உள்சென்று இறைவ இறைவியை வணங்கி விட்டு வர அதிகார நந்திகே வரரிடம் அனுமதி கேட்பது போல் வணங்கவேண்டும்

சன்னிதியின் உள்ளே கிழக்குத் திசையை பார்த்தாற்போல் இறைவன் அருள்மிகு திருவேட்டீ சுவரர் உள்ளார். தெற்குப்புறம் பார்த்தாற்போல் இறை அருள்மிகு செண்பகாம்பிகை உள்ளார். திசைக லெல்லாம் சிறந்த திசையாக கிழக்கைக் கூறுவார்கள் இங்கே ஈசுவரன் கிழக்கு நோக்கி அமர்ந்து நம்மை யெல்லாம் பார்த்து எல்லா நன்மைகளையும் அருள கூடியவனாக அமர்ந்து அருள்பாலிக்கிறான். இறை வனையும் இறைவியையும் வணங்கிவிட்டு பி கோஷ்ட தெய்வங்களை வணங்க வேண்டும்.

உட்பிரகாரத்தில், கோஷ்ட தெய்வங்களா விநாயகர், குருபகவான் என்றழைக்கப்படும் அருள்மி தெட்சிணாமூர்த்தி சுவாமி, மகாவிஷ்ணு, துர்க் அம்மன் இருக்கிறார்கள்.

அம்பாளின் இடப்புறம் உட்பிரகார வடக் மூலையில் நடராஜப் பெருமான் அருள்மிகு சிவகா யம்மனுடன் காட்சியளிக்கிறார். அதுபோல சுவாமியி வலப்புறம் அருள்மிகு சோமஸ்கந்தர் உடனு அம்பாளுடன் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்.

உட்பிரகாரத்தில் வடக்குப் பாகத்தில் அறுபத் மூன்று நாயன்மார்களும் குடிகொண்டுள்ளார்கள் மேலும் உட்பிரகாரத்தின் மேற்குப்பகுதியில் விநாயக வீரபத்திரர், அருணாச்சலேசுவரர், பாலமுருகன், நா வர், சேக்கிழார் பெருமான், சுந்தரமூர்த்தி நாயனா சங்கிலி பரவை நாச்சியார்கள், மெய்கண்டசிவ உமாபதி சிவம், அருள்நந்தி சிவம், மகாவிஷ் வள்ளி தேவசேனா சமேத முத்துக்குமாரசுவாமி, மூலவ வள்ளி தேவசேனா சமேத ஆறுமுகர், சரசுவதி, இல குமி, விசுவேசுவரர், பிரம்மேசுவரர், திருநீலகண் சிவாச்சாரியார், பிரம்மா, சண்டிகேசுவரர், பள்ளிய அம்பாள், பைரவர் ஆகியோர் இருந்து அருள் பாலி கின்றனர். சிவத்தலங்களில் சிவனுக்கு பின்பாகத்தி (கோஷ்ட தெய்வமாக) லிங்கோத்பவரை வைத் சிறப்புப் பூசைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கு இத்திருக்கோயிலில் சிவனுக்கு பின்பாகத்தில் கோஷ் தெய்வமாக மஹாவிஷ்ணுவே இருப்பது சிவாவிஷ் கோயில் போல் உள்ளது. எல்லா கோயில்களிலு மூலவர் சன்னதிக்கு கோஷ்ட தெய்வங்கள் உண் இங்கு உற்சவர் சோமஸ்கந்தருக்கும் கோஷ்ட தெய்வ கள் இருப்பது சிறப்பு அம்சமாகும்.

சந்தானாச்சாரியர் சந்நிதி 1848 ஆம் ஆண் லேயே அமைக்கப்பட்டிருக்கிறது.

வெளிப்பிரகாரத்து தெற்கு மூலையில் அருள்மிகு விசாலாட்சி சமேத அருள்மிகு காசி விசுவநாத சுவாமி சன்னதியும், இராமலிங்க சுவாமி சன்னதியும் உள்ளது.

வெளிப்புறத்து வடக்கு மூலையில் அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத ஆறுமுக சுவாமி சன்னதி உள்ளது. நம்வாழ்வின் அம்சமாக இருந்து அன்றாட வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தும் நவக்கிரகங்கள் சன்னிதியும் பைரவர் சன்னிதியும் உள்ளது.

கோயிலின் பின்புறம் பரந்தவெளி இருக்கிறது. இங்கே யாகசாலை இருக்கிறது. இங்கே தான் யாக, ஹோமங்கள் செய்யப்படுகின்றன.

எல்லா சன்னிதிகளையும் வணங்கி முடித்த பின்னரே கொடிமரத்தடிக்கு வந்து மீண்டும் எல்லா தெய்வங்களையும் எண்ணி வீழ்ந்து வணங்க வேண்டும்.

### உற்சவங்கள்

இத்திருக்கோயிலில் கீழ்க்கண்ட உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன:

சித்திரையில் பிரம்மோற்சவம், வைகாசியில் விசாகத்திருநாள், ஆனித் திருமஞ்சனம், பவித்ரோற்சவம், ஆடிப்பூரம்பெருவிழா, விநாயகர் சதுர்த்தி, சிவராத்திரி, மகா கந்தசஷ்டி, நிறைபணிக்காட்சி கார்த்திகை தீபம், ஆருத்ரா தரிசனம், தைப்பூசம், தெப்பத் திருவிழா, மாசிமகம், பங்குனி உத்திரம் ஆகியன.

இங்கே தினந்தோறும் உஷக்காலம் (பள்ளி அறையிலிருந்து சுவாமி எழுந்தருளல்) காலசந்தி (காலை முதல் 8-30 மணிவரை) உச்சிகாலம் (முற்பகல் 10-30 முதல் 11.00 மணி வரை) சாயரட்சை (மாலை 5 மணிமுதல் 6.00 மணி வரை) அர்த்தசாமம் (இரவு 8.45 மணி முதல் 9.15 மணி வரை) பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

இங்கே அருள்மிகு துர்க்கை அம்மனை இராகு காலத்தில் வணங்குதல் சிறப்பு. இத்தலத்தில் உறையும் ஸ்ரீ துர்க்கையம்மன் வேண்டுவோர்க்கு வேண்டும் அருள் கொடுப்பவளாக உள்ளாள். பெண்கள் எலுமிச்சம்பழத் தில் (சாற்றை பிழிந்துவிட்டு மூடியைப் பின்புறமாக திருப்பி நிமிர்த்தி அதில் எண்ணெய் விட்டு) விளக்கேற்றி வணங்குவது சிறப்பு. திருமண மாகாத பெண்களுக்கு திருமணம் நிகழ்வதும், குழந்தை பேறு இல்லாதவர் களுக்கு குழந்தைப் பேறு கிட்டு வதும் துர்க்கையம்மனின் மகிமை.

இங்கே ஒவ்வொரு அஷ்டமியன்றும் இரவு ஸ்ரீ பைரவர்க்கு சிறப்புப் பூஜை நடைபெறுகிறது. பக்தர்கள் வடமாலை சாற்றி, பூ பழங்களுடன் விளக்கேற்றி அர்ச்சனை செய்வித்து மகிழ்கிறார்கள். அவ்வமயம் பக்தகோடிகளுக்கு விபூதி குங்குமப் பிரசாதத்தோடு, தயிர்சாதம், சக்கரைப்பொங்கல், வடை முதலான பிரசாதங்களும் விநியோகிக்கப்படுகிறது. அஷ்டமி தினங்களில் (அமாவாசை, பௌர்ணமி தினங்களிலிருந்து எட்டாம் நாள் அஷ்டமி திதி வரும்) பைரவரை வணங்குவதால், பக்தர்களின் கஷ்டங்கள் நீங்குகிறது. அனைவரும் அஷ்டமி திதியில் இங்கு இரவு 8.30 மணி சுமாருக்கு வந்து பைரவரை வணங்கி அவரவர் கஷ்டங்களைப் போக்கிக் கொள்ளலாமே.

இது இராகு கேது பரிகாரஸ்தலமான காளஹஸ்திக்கு ஒப்பான ஸ்தலம் என்பது அசரீரி வாக்கு. இத்தலத்தில் மாதாந்திர சிவராத்திரியில், இரவு 9 மணியளவில் சிறப்புப் பூசைகள் செய்வதால் காளஹஸ்திக்கு சென்ற பலன் கிட்டும். சர்ப்ப தோஷங்கள் நீங்கும்.

பிரதோஷ காலத்தில் சிவன் வழிபாடு என்பது ஆலய தரிசனத்தில் முக்கிய அங்கம் வகிக்கிறது. பிரதோஷம் என்பது அமாவாசை பௌர்ணமிகளுக்கு முன்வரும் திரியோதசியில் மாலை 4.30 மணி முதல் 6 மணி வரை நடக்கிறது. எல்லா காலண்டரிலும் அமாவாசை பௌர்ணமி கிருத்திகை குறிப்பிடப் படுவதுபோல் பிரதோஷ தினமும் குறிப்பிடப்பட் டிருக்கும். இந்த வேளையில் சிவனை தரிசிப்பதால் எமபயம் நீங்கும். சர்வதோஷமும் நீங்கபெற்று வளமான வாழ்வும், மனநிம்மதியும் கிட்டும்.

இத்தல மகிமை குறித்து சூதமுனிவர் கூறுவதாவது: திருவேட்டீச்சுவரத் தைத் தொழும் முனிவர்கள் அனுட்டான பலத்தினாலே சிவானுபூதியை அடைவார்கள். இல்லறத்தார்கள் சகலநலங்களும் பெற்று இன்பவீட்டைக் கிரமத்தில் அடைவார்கள். மலமகற்றி, பாவங்கள் மாற்றி அறம் பொருள் இன்பம் பெற்று இறுதியில் திருவேட்டீசுவரரின் சிதாகாசத்தில் மன்னி சிவானுபாவத்தை அடைவர்.

கடலைக் கையில் அடக்கிக் கடுகளவாக அருந்திய அகத்தியர், பராசுரர், வாமதேவர், சுகமகரிஷி, பல்கோடி முனிவர்கள் யாவரும் ஈசனின் அருளால் ஐம்புலன்களை வென்ற மகாதேவர்கள் ஆவர்.

மாமாயை ஒழிந்து, மயக்கம் நீங்கி, மின்னல் போன்ற செகஜாலத்தை விட்டகன்று, பாசம் தவிர்ந்து, பற்றற்று, மன அயர்வின்றி, தியான யோகம் கைகூடி, உளத்தில் இளைப்பாறி அளவில்லாத அருளமுத



**மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திருமிகு சி. துரைராஜ் அவர்கள், 23.3.02 அன்று .அன்னதானத் திட்டத்தை.த் துவக்கி வைத்தார்கள். திருக்கோயில் உதவி ஆணையர் / நிர்வாக அதிகாரி திருமிகு சி. பெருமாள் சுவாமி எம்.ஏ., எம்.பில்., பி.எல் அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புற செய்து இருந்தார்கள்.**

பிரவாகத்தில் 'சர்வம் பிரமமயம்' என உணரச் செய்பவர் ஈசுவரனே!

பிரம்மாவும் திருவேட்டீசுவரனை வலம்வந்து அருள்பெற்றிருக்கிறார். சனகாதி முனிவர்களும் மலரிட்டு அர்ச்சனைப் புரிந்து அருள் பெற்றிருக்கிறார்கள்.

திருவேட்டீச்சுரத்தில் செய்யப்படும் பலவகைத் தவங்கள் முக்தியைத் தரும், பல்வகைத் தானங்கள் செல்வத்தைத் தரும், பல்வகைத்தான பூசனைகள் பிறவி என்னும் மாசைத் தேய்க்கும். இங்கு நல்வினைகள், செய்யச் செய்ய முன்செய்த பலதோஷங்கள் நீங்கும். மெய்யன்பர்க்குத் தெவிட்டாத இன்பமளிக்கும் நமச்சிவாயம் இங்கு நீங்காது எக்காலமும் அருளாகி வீற்றிருக்கின்றார். இத்தகைய சுத்த வடிவான திருவேட்டீச்சுரனை, செண்பகவல்லியும், கணபதியும் அழகு மயில்வாகனனும் வழிபட்டு உள்ளார்கள்.

திருவேட்டீசுவரத் தலத்தில் தவம் புரிதல் பிறவிக் கடல் தாண்ட தெப்பத்தைப் பெற்றதை ஒக்கும்.

''பொன்னார் மேனியன் புகழினைப் பாட
இன்னா நீங்குமே இனிதெலாம் நடக்குமே
பன்னாள் செய்திடும் பாவம் சென்று
என்னார் துயர்போய் இவ்வுலகம் தழைக்குமே!

இத்தலத் தீர்த்தத்தில் நீராடி ஸ்ரீ செண்பக வல்லித் தாயாரை வணங்குபவர்கள் செண்பக மேனி பெற்றுச் செல்வந்தர்களாவார்கள். மக்கட்பேறு பெறுவர், உலகில் நீடுவாழ்வார்கள். பரிதிமுன் பனியே போல துன்பம் நீங்கி இன்பம் பெறுவர்.

திருவேட்டீசனை தினம்தினம் தொழுவோம்
திருவருள் பொருளுடன் திறம்பல பெறுவோம்
உறுபொருள் தருவது உருத்திர மந்திரம்
உறுதுணை செண்பகம் உடன்வரும் மலர்முகம்!

இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த சிவனைத் தொழுபவர்க்கு இகபர சுகம் கிட்டும் என்பது உறுதி.

நித்தம் வாழ்சிவ தரிசனம் பெற்று
பித்தம் தெளிந்து பீடுகள் அகற்றி
சுத்த மோடு சுகமாய் வாழ்ந்து
சித்தம் பெறுவோம் சீராய் வாழ்வோம்''


இது ஒரு சிவயோகத் தலமாகும்.

இத்திருக்கோயில் சென்னை திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில், ஸ்டார் திரையரங்கம் எதிரில், திருவேட்டீசுவரன் பேட்டையில் உள்ளது.

★★★

# வினை தீர்க்கும் நாயகன்

– திருமதி உமா சுப்பிரமணியன், மடிப்பாக்கம்



சித்தி விநாயகனை
சுற்றி வலம் வந்தால்
புத்தி நலம் பெருகும்
புண்ணியம் தினம் பெருகும். (சித்தி)

இறைவனுக் கெல்லாம் அதிபதி
எங்கும் நிறைந்தவன் கணபதி
நினைத்த மனத்திற்கு நிம்மதி
நித்தம் வழங்கும் அருள்நிதி. (சித்தி)

அருகம்புல் மாலை கட்டி
அனுதினமும் போடு
அண்ட வரும் அல்லலெல்லாம்
அகன்று விடும் பாரு. (சித்தி)

எருக்கம்பூ மாலை கட்டி
எப்போதும் நீ போடு
எள்ளளவும் எம பயமில்லை
கணபதி பதம் நாடு. (சித்தி)

எலியின் மீது வீற்றிருக்கும்
ஆனை முகன்
எளியோரின் இன்னல் போக்கும்
ஈசன் மகன். (சித்தி)

வீடு வரும் துயரங்களை
வீதியிலே துரத்திவிட
அரசமரம் ஆற்றங்கரை
முச்சந்தியில் அவனிருப்பான்

சங்கத் தமிழ் தருவான்
தங்கும் புகழ் தருவான்
எங்கும் துணை வருவான்
எதிலும் ஜெயம் தருவான். (சித்தி)

★ ★ ★

# மணிமொழி அருளிய மாணிக்கவாசகர்

- **கவிஞர் ச.க. ஏகாம்பரம்,** எம்.ஏ., பி.எட்.

உள்ளம் உருகும் உயர்ந்ததோர் நூலென்றால்
கள்ள களைநீங்கக் காணலாம் - நல்லோர்
தெரிந்தெடுத்த திருமறை நூலாம்
திருவா சகம்என்னும் தேன் - எழுதியது அடியேன்.

தமிழ் மணக்கும், தென்பாண்டி நாட்டிலே மதுரைக்கு ஏழு கல் தூரத்தில் வற்றாது நீர்தந்து வளம் கொழிக்கும் வைகை ஆற்றின் கரையிலே திருவாதவூரில் ஏறக்குறைய 1650 ஆண்டிற்கு முன்னால் அந்தணர் மரபிலே வாதவூரடிகள் தோன்றினார். வாதவூரர் என்றே பெயர்பெற்று, இளமையிலேயே ஆயகலைகள் அத்தனையும் அறியப்பெற்றார்.

நல்லொழுக்கம் உடையவராய் விளங்கியதால் இவரது மேன்மையை அறிந்த அரிமர்த்தன பாண்டியன் தமது அவைக்கு தலைமை அமைச்சராக இருக்கும்படி வேண்டவே அப்பொறுப்பை ஏற்றார். பாண்டிய மன்னன் இவரது அருளையும் அறிவுத் திறத்தையும் அறிந்து இவருக்கு 'தென்னவன் பிரம்மராயன்' என்ற பட்டத்தையும் சிவிகை, குடை, கவரி முதலான விருதுகளையும் நிறைந்த செல்வத்தையும் அளித்தார். இவரும் அறநெறி பிறழாது சிலகாலம் அமைச்சுப் பணியைச் செலுத்தி வந்தார். ஆனால் அரசபோகத்தில் இவரது மனம் செல்ல வில்லை. அதனால் சிவ கதியடைய வேண்டி நல்லாசிரியரை வேண்டினார்.

ஒரு நாள் கீழக்கடற்கரையில் நல்ல குதிரைகள் விற்க வந்திருந்த செய்தியறிந்த பாண்டிய மன்னன் வேண்டிய அளவுக்குப் பொன் கொடுத்து குதிரைகளை வாங்கிவர வேண்டினார். வாதவூரரும் கடினமான பலவழிகடந்து திருப்பெருந்துறை என்ற இடத்தை அடைந்தபோது அங்கே ஒரு சோலையிலிருந்து அரநாம முழக்கம் கடலொலிபோல் ஒலிப்பக் கேட்டார். ஆங்கே சிவபெருமான் மானைக்காட்டி மானைப் பிடிப்பதுபோல் வாதவூருக்கு ஞான உபதேசம் செய்ய திருவுளம் கொண்டு சிவயோகி வேடம் தாங்கி சிவ கணங்கள் தமக்குச் சீடர்களாக விற்றிருக்க ஒரு குருந்த மரத்தடியில் ஞானப்பொருள்களை விளக்கிக் கொண்டிருந்தார். இவ்வரிய காட்சிதனைக் கண்ட வாதவூரர் தொழுதகை தலைமேலேறத் தழும்பு கண்ணீருள் மூழ்கி குருமூர்த்தியின் திருவடிகளில் விழுந்து தம்மை ஆட்கொள்ளும்படி வேண்டினார். இதற்கென்றே வந்துள்ள குருமூர்த்தியும் வாதவூரருக்குத் திருநோக்கால் பரிசத்தால் திகழும் வாக்கால் ஞானதீட்சை செய்தருளினார். சிவஞானம் கைவரப்பெற்ற வாதவூரர், உள்ள மகிழ்வோடு பல பாடல்களை தன்குரு மீது பாடினார்.

குருந்த மேனிய குருநாதரும் இவரது பாடல்கள் அருள் வீசும் மாணிக்க வாசகமாக இருந்தமைக்கு மகிழ்ந்து வாதவூரருக்கு 'மாணிக்கவாசகர்' என்ற நாமம் சூட்டினார். மாணிக்கவாசகரும் தமது உடல், பொருள், ஆவியாகிய மூன்றும் அரசன் தந்த பொருளும் இறைவனது உடைமைகளே என்றும், அரசனும் தானும் அடிமைகளேயென்றும் உணர்ந்து அவைகளை இறைவனாகிய குருமூர்த்திக்கே அர்ப்பணம் செய்தார். இறைவனும் அப்பொருளைப் பெருந்துறையில் திருக்கோயில் கட்டப் பணித்து அடியவருக்கு உதவுமாறு கட்டளை இட்டார். அவ் வாறே செய்து உலகப் பற்றினை நீக்கி கோவண ஆடையும் திருநீறும் கொண்டு மெய்த்துறவியாகத் திருப்பெருந்துறையில் அமர்ந்தார் திருவாதவூரர்.


இது அறிந்த பாண்டிய மன்னன் உடனே தன்னிடம் வருமாறு திருமுகம் விடுத்தான். அத்திருமுகத்தைப் பொருட்படுத்தவில்லையாயினும், இறைவன் ''நாம் ஆவணி மூலத்தில் குதிரைகளைக் கொண்டு வருவோம். நீ முன்னதாகச் செல். அத்துடன் இம்மாணிக்கக் கல்லையும் அரசரிடம் கொடு'' என்று கட்டளை இட்டு மாணிக்கத்தையும் தர, அதை அரசனிடம் தந்து ஆவணி மாதத்தில் குதிரைகள் வருமெனச் சொல்லி அரசனை மகிழ்வித்தார். ஆவணி மூலத்திற்குமுன் இரண்டொரு நாள் முன்னர்வரை குதிரை வராமையைக் கண்ட பாண்டியன் மாணிக்கவாசகர் தன்னை ஏமாற்றிவிட்டார் என்று அவரை சிறையிலடைத்து பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாக்கினான். மாணிக்கவாசகப் பெருமான், எம்பெருமானையே நோக்கி ''நன்றே செய்வாய், பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே'' என்ற உறுதியோடு இருந்தார். ஆவணி மூலத்தன்று காலை குதிரைகள் வந்தன. ஆலவாய் இறைவனே குதிரைச் சேவகனாய் வந்தார். மன்னன் மனமகிழ்ந்து மாணிக்கவாசகரைச் சிறையிலிருந்து விடுவித்து மன்னிப்பும் கேட்டுக் கொண்டான். இறைவன் திருவிளையாடலாலே நரிகளே குதிரைகளாக வந்தன. அன்றிரவே மீண்டும் நரிகளாயின. பாண்டியன் சினமிகுந்து மாணிக்கவாசகரை துன்புறுத்தத் துணிந்தான். உச்சிவேளையில் சுடுகின்ற வைகை மணலில் நிற்க வைத்தான். உடனே இறைவன்

கருணையினால் வைகையில் வெள்ளம் பெருக்கெடுத்து நிரப்பினார். வெள்ளம் கரையுடைத்து மதுரைக்குள் பாய்ந்தது. அமைச்சர் பெருமக்கள், மாணிக்கவாசகப் பெருமானை துன்புறுத்தியதே இத்தனைக்கும் காரண மென்றனர்.

அரசனும் இதையுணர்ந்து அவரை விடுவித்து வணங்கி வெள்ளத்தைத் தடுத்தருள் செய்ய வேண்டி னான். அவர் கரைக்குச் சென்றதுமே வெள்ளம் நின்றது. எல்லா உடைப்புகளும் அடைக்கப்பட்டன. வந்தி யென்ற கிழவியின் பங்குமட்டும் அடைபடவில்லை. இறைவனே அவளிடம் கூலிக்காகப் பிட்டையுண்டு வேலையைச் செய்யாமல் திருவிளையாடல் புரிந்தார். வந்தியின் ஆள் வேலை செய்யாமை அறிந்த மன்னன் அவனைப் பிரம்பாலடிக்க அக்கணமே அரசன், தேவர், மனிதர் முதலான எல்லா உயிருடம்பிலும் அந்த அடி யின் தழும்பு இருக்கக் கண்டும், ஆளும் மறையவும் கண்டு பாண்டியன் இத்திருவிளையாடலையும், மாணிக்க வாசகப் பெருமானின் பெருமையையும் நன் குணர்ந்து அவரை வணங்கினான். மாணிக்கவாசகர் அமைச்சர் பதவியை விடுத்து திருப்பெருந்துறை சென்றார்.

அங்கு குருந்தமேவிய குரவரையும் குழாங் களையும் கண்டார். இறைவனும் அங்குள்ள குளத்திலே தோன்றும் சோதியிற் கலக்கும்படியாகவும், பல தலங் களை வணங்கி நலமளிக்கும் தில்லையுள் கோலமார் திரு பொதுவினில்வருகவெனவும் மாணிக்க வாசகருக்கு கட்டளையிட்டு மறைந்தார், மாணிக்கவாசகர், உத்தர கோச மங்கை, இடைமருது, அண்ணாமலை, திருக்கழு குன்றம், காஞ்சி போன்ற பல தலங்களை வணங்கித் திருவாசகப் பாடல்களைப் பாடி தில்லையில் வந்து, திருக்கூத்தனை வணங்கி ஊருக்கு புறத்தே ஓரிடத்தில் வசிக்கலானார்.

ஈழ நாட்டில் சிவனடியார் ஒருவர் இரந் துண்டு வாழ்ந்துவந்தார். இதைக் கண்ட புத்தர்கள் பொறாமையால் தமது மன்னனிடம் கூறினர். அரசன் அந்த அடியாரை வருவித்து ''பொன்னம்பலம்'' என் பதன் வரலாற்றை அறிந்து, தனது குருவோடும், ஊமைப் பெண்ணோடும் தில்லைப் பொன்னம்பலம் சென்று புத்த தேவரை அங்கு நிலைநாட்டும் உறுதி கொண்டு புறப்பட்டு தில்லை அடைந்தான். அரசனுடன் வந்த புத்த குருவும் தில்லையிலுள்ளவரை வாதுக்கழைத்தான். இறைவன் தில்லை வாழ் அந்தணர்க்கு கனவில் தோன்றி மாணிக்க வாசகரைக் கொண்டு புத்தரை வாதில் வெல்லுமாறு கட்டளையிடவும், மாணிக்க வாசகரும் சிற்சபையில் சோழமன்னனும் அந்தணரும், அறிஞரும் அமர்ந்திருக்க புத்த குருவை நோக்கி உன் வாதந்தான் என்னே? என்று வினவினார். அவன் தனது கொள்கைகளைக் கூறவே இவர் சைவ உண்மையை




எடுத்துரைத்து புத்த வாதத்தை மறுத்தார். புத்தகுரு இதையுணராது, மீண்டும் தனது வாதத்தையே உரைக்க, மாணிக்கவாசகர் இறைவன் அருளால் அவர்களை யெல்லாம் ஊமைகளாக்கினார்.

உடனே புத்த அரசன் ''பேசுவோரை ஊமர் களாக்கினீர். என் மகளை பேசவைத்தால் நானும் என் நாடும் சைவத்தை மேற்கொள்ளத் தடையில்லை'' என்றார். மாணிக்கவாசகர் அப்பெண்ணை பல கேள்வி கள் கேட்க அவைகட்கு பிறவி ஊமையான அப்பெண் தன்வாயால் பேசி பதிலையும் கூறினாள். இந்த நிகழ்ச்சி யைத் தொகுத்து சுவாமிகள் ''திருச்சாழல்'' என்று அருளினார். புத்த மன்னன் சைவரானான்.

பின்பு சில காலம் கழித்து இறைவனே ஓர் அந்தண உருக்கொண்டு, மாணிக்க வாசகரிடம் சென்று தான் பாண்டி நாட்டி லிருந்து வந்ததாகக் கூறி திருவாசகம் முழுமையையும் சுவாமிகள் சொல்ல, ஏடும் எழுத் தாணியும் கொண்டு எழுதி அகப்பொருட்கோவை சொல்ல வேண்டுமென்று கூறவும், சுவாமிகள் சொல்ல அதையும் எழுதிக்கொண்டு ''மாணிக்கவாசகன் சொல்ல அழகிய திருசிற்றம்பலமுடையார் எழுதியது'' என்று கையொப்பம் இட்டு சிற்சபையின் பஞ்சாக்கரப்படி யிலே ஒருவரும் காணாது வைத்தனர். தில்லைவாழ் அந்தணர் இவ்வேடுகளை, மாணிக்கவாசகருக்குக் காட்டி இப்பாடல்களின் பொருளைத் தெரிவிக்க வேண்டினர். மாணிக்கவாசகரும் அவர்களை அழைத்துச் சென்று தில்லைத் திருக்கூத்தனைச் சுட்டி இவனே பொருளெனக் காட்டி அவன் திருவடியிலே ஆனி மகத்தில் இரண்டறக் கலந்து மறைந்தார்.

அவர் பாடிய ''திருவாசகத்திற்கு உருகாதவர் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' என்பதற்கிணங்க அவரது பாடல்களை நாமும் உள்ளம் உருகப் பாடி இறையருள் பெறுவோமாக! ★

# ''நினைப்பற நினைந்தேன்''

– சேது. சிவா, சின்னமனூர்.

மாணிக்க வாசக சுவாமிகள் தாம் திருவாய் மலர்ந் தருளிய திருவாசகம் கோயில் பதிகம் பாடல் ஒன்றில் திருப்பெருந்துறை சிவனை நோக்கித் தனக்குத் திரு வருள் செய்து, அறியாமையை நீக்கி, மனதிடத்தில் உதிக்கின்ற கதிரவனைப் போன்று தோன்றி நின்ற தன்மையை மறந்து நினைக்காமல் நினைந்து கொண்டு இருப்பதாகவும்; எல்லாப் பொருளும் அணுஅணு வாய்த் தேய்ந்து தேய்ந்து உன்னிடம் ஒடுங்க ஒரு பொருளாக நிற்கும் திருப்பெருந்துறை சிவனே! ஒரு பொருளிலும் நீ இல்லை, நீ இல்லாமல் ஒரு பொருளும் இல்லை. உன்னை அறிந்து கொள்ளக் கூடியவர் யார்? என்று பாடுகின்றார்.

இன்று எனக்கு அருளி
இருள் கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின்தன்மை நினைப்பற
நினைந்தேன் நீயலால்
பிறிது மற்றின்மை
சென்று சென்று அணுவாய்த்
தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்
திருப்பெருந்துறை உறைசிவனே
ஒன்று நீஅல்லை, அன்றி
ஒன்று இல்லை, யார்
உன்னை அறிகியற் பாரே.

நினைப்பு என்புது ஒன்றினை மறந்துவிட்டுப் பின் நினைவுக்குக் கொண்டு வருவது ஆகும். நினைப் பற நினைதல் - மறந்து நினைக்காமல் எப்பொழுதும் நினைந்து கொண்டிருத்தல்.

திருவாசகம் சிவபுராணத்தில் முதலில் ஐந்து எழுத்தை வாழ்த்துகின்றார். அடுத்து அந்த ஐந்தெழுத்துத் தலைவனின் திருவடிகளை வாழ்த்துகின்றார். இரண் டாவது வரியில் கண்ணிமைக்கும் நேரம் கூட தன் நெஞ்சகத்தை விட்டு அகலாதவனின் திருவடிகளை வாழ்த்துகின்றார்.

இமைப் பொழுதும் என் நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க

கண் இமைக்கும் காலம் கூட அவனை மறக் காமல் நினைந்து கொண்டு இருக்கின்றார் என்றுதானே கொள்ள வேண்டும்.

திருத்தெள்ளேணத்தில், மறந்தும்கூட தன் னுடைய திருவடிகளை மறக்காமல் இருக்க அருளிய அவனுடைய தன்மையைப் பாடுவோம் என்று பாடு கின்றார்.


மறந்தேயும் தன்கழல்தான்
மறவா வண்ணம் நல்கியஅத்
திறம்பாடி....

திருத்தோணோக்கத்தில் தவத்திற்கு எளிய முறை கூறுகின்றார். சிந்தனையை (நினைப்பை)ச் சிவமய மாக ஆக்கிக் கொண்டு எச்செயல் செய்தாலும் அதனைக் கருணையினால் தவமாக ஆக்கும் அப்பன் என்று பாடுகின்றார்.

சித்தம் சிவம் ஆக்கிச்
செய்தனவே தவம் ஆக்கும்
அத்தன் கருணையினால்...

இக்கருத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டு சாக்கிய நாயனார் வரலாறு ஆகும். சிந்தனையில் இவற்றை நிறுத்திக் கொண்டு கையில் உள்ள கல்லைச் சிவலிங் கத்தின் மீது மலராகப் பாவித்து எறிந்தார். இறைவன் அதனை மலர் அருச்சனையாக ஏற்றுக்கொண்டு அவருக்குச் சிவலோகப் பதவி வழங்கினான்.

பிரார்த்தனைப் பத்தில், திருப்பெருந்துறை இறை வனிடம், 'உன் அடியவர்கள் முடிவில்லாமல் நெஞ்சம் உருகி உன்னை முழுவதும் பெற்றுவிட்டார்கள். அந்த அடியவர்கள் கூட்டத்திலிருந்து விலகி வெளியே இருந்துகொண்டு நாய் போன்ற நான் புலம்புகின்றேன். அசையாத, நிலைத்த, விலகாத, மறக்காத, நினைப்பு இல்லாத, அளவில்லாத, அழியாத பேரின்பப் பெருங் கடலே! உன்னைப் பெறுவதற்கு உண்மையான அன்பு தனை நான் பெற அருள் செய்' என்று வேண்டு கின்றார்.




**திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலில் "அன்னதானத் திட்டம்" 23-02-2002 அன்று பகல் 12.15 மணிக்கு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திருமிகு ஓ. பன்னீர்செல்வம் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. மாண்புமிகு சட்ட அமைச்சர் திருமிகு டி. ஜெயக்குமார் அவர்களும் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.**

அறவே பெற்றார் நின்அன்பர்
அந்தம் இன்றி அகம் நெகவும்
புறமே கிடந்து புலைநா யேன்
புலம்புகின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு
பேரா ஒழியா பிரிவில்லா
மறவா நினையா அளவிலா
மாளா இன்பமா கடலே.

நினைப்பற நினைதலை நாம் ஒவ்வொருவரும் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கின்றோம். அதனைத் தெளிந்து தெரிந்து கொள்வது இல்லை.

அதிகமான அன்பு (குறிப்பாகக் காதல்) மகிழ்ச்சி, துன்பம், பயம் இவற்றில் ஏதேனும் ஒன்றின் நிகழ்வு நம் அடிமனதில் பதிந்துவிட நாம் அதனை மறக்காமல் நினைந்துகொண்டே இருக்கின்றோம்.

நம் வீட்டில் ஒரு குழந்தைக்கோ, வயது முதிர்ந்த பெரியவருக்கோ உடல் நலம் குன்றி மிகவும் துன்பப் படுவதாக வைத்துக் கொள்வோம். நமக்கு உள்ள கடமைகளின் காரணமாக வேறு வேலையாக நாம் வெளியே சென்றிருந்தாலும், நம் அடிமனதில் அந்த நோயாளியைப் பற்றித் தான் நம் நினைப்பு இருந்து கொண்டே இருக்கும். இதுதான் நினைப்பற நினைதல்.

திருப்பெருந்துறை இறைவன், உதிக்கின்ற கதிரவனைப் போன்று தன் உள்ளத்தில் நிற்கும் தன்மையை மணிவாசகர் தன் அடிமனதில் நிலைநிறுத்திக் கொண்டுள்ளார். அதனால் அந்தப் பேரின்பக் காட்சியை அவரால் நினைப்பற நினைக்க முடிகின்றது.

★ ★ ★

# 'அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே'

— சிவத்திரு த. ஆறுமுகம்

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியோடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லராகில்
அங்கமெலாம் குறைந்து அழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே!

இந்தத் திருநாவுக்கரசர் பாடலை வைத்துச் சில புலவர்கள், இறைவழிபாடு செய்பவர் புலால் உண்டால் தவறில்லை என்று திருநாவுக்கரசரே சொல்லி விட்டார் என்று கூறி வருகிறார்கள். உள்ளபடியே திருநாவுக்கரசர் புலால் உண்பதைத் தவறாகக் கருத வில்லையா? அல்லது ஏன் அப்படிப் பாடிவிட்டார் என்பவை ஆராயத்தக்கன.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் காலத்திலும் அதற்கு முன்னரும் தமிழகத்தில் தீண்டாமை இருந்து வந்தது. தீண்டத்தகாதோர் என்போர் கோவிலுக்குள் சென்று வழிபட முடியா நிலையும் இருந்தது.

அக்காலத்தில் சமணர் செல்வாக்கும் ஓங்கி இருந்தது. சமணர், தீண்டத்தகாதவரைத் தம் சமயத்தில் சேர்த்துக் கொண்டால், தம் சமய மக்கள் தொகை மிகுந்து, தம்சமயமும் வலுப்பெறும் என்று கருதினர். அப்படிபலரை சமணர்களாக மாற்றி விட்டனர் என்று தெரிகிறது.

சமணர் பாடல்களில் இரண்டில் இந்த கருத்துக் களுக்குச் சான்றுகள் உள்ளன.

ஒன்று ''அருங்கலச் செப்பு'' என்ற நூலுள் உள்ளது. அப்பாடல்

''பறையன் மகன் எனினும் காட்சி உடையான்
இறைவன் என்று உணரற் பாற்று.'

இதன் பொருள் : தாழ்வாகக் கருதப்படுவானா யினும் நற்காட்சி உடையவன் ஆனால் தலைமகன் என உணரப்படுவான் (நற்காட்சி - உண்மைப் பொருளை ஆராய்ந்து தெளிவடைதல்)

இந்தப் பாடலை இயற்றியவர் வரலாறும் பெயரும் தெரியவில்லை. ஆனால் இவர் காலம் கி.பி. 8ம் நூற்றாண்டு என்று கூறப்படுகிறது.

இந்தப் பாடல் வடமொழியில் உள்ள நூலின் மொழிபெயர்ப்பாம்.

வடமொழியில் இந்நூலின் பெயர் ''இரத்தின கரண்டகம்'' (இரத்தின கரண்டக சிராவகாசாரம்) (விலை உயர்ந்த இரத்தினங்களால் ஆன அணிகலன் களை வைக்கும் பேழை) (தமிழில் அருங்கலச் செப்பு) இதன் ஆசிரியர் சமந்த பத்திர ஆசாரியர் என்னும் சமண முனிவர். இவர் கி.பி. 6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந் தவர் என்று முனைவர் சதிச்சந்திர வித்யாபூஷண் என்பவரும், கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந் தவர் என்று இதன் உரையாசிரியர் கலிபூஷண் அமுத லால் ஜெயின் என்பவரும் கூறி இருக்கின்றனர்.

எப்படியோ இவ்வாசிரியர் திருநாவுக்கரசர் காலத் தவர் அல்லது அவருக்கும் முற்பட்டவர் என்று தெரி கிறது.

மற்ற ஒரு பாடல் பிற்காலத்தது. ''திருநூற்று அந்தாதி'' என்று நூலின் 28வது பாடல், இந்நூலை இயற்றியவர் அவிரோதி ஆழ்வார் (வைணவராக இருந்து சமணராக மாறியிருக்கலாம்)

''அந்தர மேலோரு மந்தரம் வந்தென அம்மலர் மேல்
வந்த பிரானடிக் கன்பிலராயின் மறையவரே
நிந்தர்கள் சாதியில் நீசர்கண் டீர் அந்த நீசரும்
சுந்தர நேசர்களாயின் விண்ணோரினும் சுத்தர்களே''

பொருள்: மலர் மேல் வந்த பிரானாகிய அருக தேவருக்கு அன்பில்லாதவர் மறையவரானாலும் தாழ்ந்தவர், நிந்தனைக்குரியவர். தாழ்ந்தவராயிருந்து அருக தேவருக்கு நேசரானால் வானோரை விட தூய்மை யானவர்.

இப்படியெல்லாம் கருத்துக்களைப் பரப்பி சமணர் தீண்டத்தகாதவரைத் தம் சமயத்துக்கு மாற்றிவிட்டிருக் கிறார்கள் என்று தெரிகிறது

இத்தகைய சமய மாற்றத்தைத் தடுக்கவே திருநாவுக் கரசரும் ''ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கை வார் சடைக்கரந்தார்க்கு அன்பரனால் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே'' என்று பாடித் தீண்டத் தகாதவரைத் தழுவிக் கொண்டார் என்று தெரிகிறது.

# நம்பிக்கையும் தும்பிக்கையும்

— ''சமயச் செம்மல்'' ஏ.வி. கோதண்டாராமன்

*(சென்னை ஸ்ரீ வைணவ மகாசங்கத்தில் படிக்கப்பெற்ற கட்டுரையாகும் இது.)*

உயர்வற உயர்நலமுடையவனும், மயர்வற மதிநலம் அருளுபவனும் ஆகிய ஸ்ரீமந் நாராயணன் முழுமுதற் கடவுளாக விளங்கினான் என்பதை ஆழ்வார்கள் பரக்கப் பாடியுள்ளார்கள்

1. ''கண்ணனல்லால் தெய்வமில்லை கருத்த மனம்
ஒன்றும் வேண்டாம்''

2. ''மால்தனில் மிக்குமோர் தேவும் உளதோ''
(திருவாய்மொழி. 2-2-3)

3. ''நாரணன் முழு வேமுலகுக்கும் நாதன் வேதமயன்.''
(திருவாய்மொழி. 2-7-2)

4. ''மால் அடியை அல்லாது மற்று
எண்ணத்தான் ஆமோ'' (முத. திருவ. - 31)

5. ''திருமாலை அல்லது தெய்வம் என்று ஏத்தேன்''
(முத.திருவ -36)

6. ''மாயவனை அல்லது இறையேனும்
ஏத்தாது என் நா'' (முத. திருவ. 94)

7. ''மாற்றுமோர் தெய்வமுண்டோ
மதியிலா மானிடங்காள்
உற்ற போது அன்றி நீங்கள்
ஒருவனென்று உணரமாட்டீர்'' (திருமாலை -9)

8. ''சிலையினால் இலங்கை செற்ற
தேவனே தேவனாவான்'' (திருமாலை -7)

9. ''தேவாதி தேவன் எனப்படுவான் - முன்னொருநாள்
மாவாய் பிளந்த மகன்'' (இரண்-திருவ. -28)

10. ''இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம்''
(நான். திருவந் - 96)

11. ''முற்ற உலகெல்லாம் நீயேயாகி''
(பெரியா. திரு. 4-10-4)

12. ''நாராயணனே நமக்கே பறை தருவான்''
(திருப்பாவை. 1)

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருமால் இவ்வுலகங்களைத் தோற்றுவித்துக் காத்து வருபவன். அறத்தைச் செங்கோலாகவும் அருளைக் குடையாகவும் கொண்டவன். அவன் அடியார்களிடத்தில் அளவ்கடந்த அருளைப் பொழிபவன். மானிடர், விலங்கு, பறவை, முதலான அனைத்து உயிர்களிடத்திலும் பாரபட்சமற்றவன். திருவாய்மொழிக்கு இலக்கணமானவன். பத்துடை அடியவர்க்கு எளியவன். ''பிறர் நோவு கண்டு ஐயோ! என்று இரங்குபவன் காண் வைணவன்'' என்ற நஞ்சீயர் வாக்கிற்கிணங்க தன்னை நம்பி வணங்கும் அனைவரையும் காத்து அருளுபவன். அத்தகைய திருமால் விலங்கு ஒன்றுக்கு அருள்புரிந்ததை இன்று காண்போம்.

## நம்பிக்கை

இந்த்ரத்யும்நன் என்ற அரசன் ஒருவன் திருமாலை நோக்கி தவம் செய்து வந்தான். அகத்தியர் ஒரு முறை இவன் தவம் செய்த இடத்திற்குச் சென்றார். தவத்தில் ஆழ்ந்திருந்த இந்த்ரத்யும்நன் முனிவரது வருகையை உணராமலும், வரவேற்காமலும் இருந்து விட்டான். இதைக் கண்டு கோபித்த அகத்தியர்.

''யானையைப் போல் செருக்குற்றிருக்கும் நீ - யானையாகப் பிறக்கக்கடவாய்'' என்று சபித்து விட்டார்.

இவ்வரசன் அகத்தியரின் சாபத்தினால் மறுபிறவியில் யானையாகப் பிறந்தான். முற்பிறவியில் திருமாலை நோக்கி தவம் இயற்றியதால், இப்பிறவியில் திருமால் பக்தியுடையவன் ஆனான். தினமும் காலையில் மடுவில் நீராடி, துதிக்கையில் நீரையும், தாமரை மலரையும் கொண்டு திருமாலை வழிபட்டு வாழ்ந்து வந்தான்.

இந்த அரசனைப் போலவே தேவ முனிவர் ஒருவரும் நீரில் நின்று தவம் செய்து வந்தார். அப்போது ஹூ ஹூ என்ற கந்தவர்வன் முனிவரின் காலைப் பிடித்து இழுத்து தவத்தைக் கலைத்தான். எனவே இந்த முனிவர் அவனை முதலையாகப் பிறக்கும்படிச் சபித்தார். அந்த கந்தர்வன்தான் இம்மடுவில் முதலையாக வாழ்ந்து வந்தான்.

## தாமரையும் திருமாலும்

மலர்களிலே தாமரை மலர் மிகவும் சிறந்த மலர். திருமால் சூரிய நாராயணனாக விளங்குகின்றார். இம் மலர் பகலில் சூரியன் ஒளிப்பட்டுதான் மலரும்.

சூரிய ஒளியை விட அதிகமான வெப்பத்தை அதன் மீது விழச் செய்தாலும் அது மலராது. எம்பெருமானைத் தலைவனாகக் கொண்டு தாமரை தன்னைத் தலைவியுமாகக் கருதி, தலைவன் வரவு கண்டு மகிழும் தலைவியைப் போல, கதிரவனைக் கண்டு மகிழக் கூடியது. இதைக் கண்ட குலசேகராழ்வார் தாமரை மலரைப் போல, யானும் திருமாலை அல்லது வேறு தெய்வத்தை மனதில் கருத மாட்டேன் என்கின்றார்.

''செந்தழலே வெந்தழலைச் செய்திடினும் செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லால் அலராவால்
வெந்துயர் வீட்டாவிடினும் வித்துவக்கோட்டம்மா - உன்
அந்தமில் சீர்க்கல்லால் அகங்குழைய மாட்டேனே''
(பெரு. திரு. 56)

மற்றும் திருமாலின் திருவடிகளும் திருமகளின் திருவடிகளும் தாமரை மலரைவிட மென்மையானவை என்றும், திருமகள் இத்தாமரை மலரிலே வீற்றிருக்கின்றாள் என்றும், திருமாலின் திருக்கண்கள் தாமரை மலர் போன்ற அழகையுடையதென்றும் ஆழ்வார்கள் அருளியுள்ளனர்.

ஒண்பூ உயரும் கதிரவனையே நோக்கும்
ஒண் தாமரையாள் கேள்வனே ஒருவனையே
நோக்கும் உணர்வு (முத. திருவ. 67)

தேனார் கமலத் திருமாமகள் கொழுநன்
தானே வைகுந்தம் தரும் (உ.ர.மா - 61)

செங்கமலத்தலர் போலும் கண், கை, கால், செங்கனிவாய்
அக்கமலத்து இலை போலும் திருமேனி.
(திருவாய்மொழி - 9-7-3)

இத்தகைய தாமரை மலரைத் திருமால் பெரிதும் உகந்துள்ளான் என்பதை அறிந்த கஜேந்திரன் தினமும் காலையில் மடுவிற்குச் சென்று நீராடி, துதிக்கையில் தாமரை மலரைக் கொணர்ந்து திருமாலின் திருவடிகளில் சேர்த்து, வணங்கி வழிபட்ட பின்னரே தனக்குரிய இரை தேடச் செல்லும்.

நமது வைணவ நெறியில் நீராடி, திருவாராதனை செய்த பின்னரே உணவருந்த வேண்டும் என்னும் இப்பழக்கம் கையாளப்பட்டு வருகிறது. ஐந்து அறிவே உடைய விலங்கானாலும் ஆறறிவு படைத்த மக்கள் செய்ய வேண்டிய கடமையை கஜேந்திரன் செய்து வந்தது. இதனையே ''மாக்கள் மக்களாவதும் உண்டு'' என்றனர் சான்றோர்.

இவ்வாறு பலகாலம் தொண்டாற்றிய கஜேந்திரனின் வழிபாட்டில் திருமால் பெரிதும் மகிழ்ந்தான். இதனைக் கீழ்க்காணும் பெரியாழ்வார் பாசுரத்தால் அறியலாம்.

''ஒருவாரணம் (யானை) பணி கொண்டவன்
பொய்கையில்''
(பெரியா. திரு. 4.2.5)

ஒரு நாள் அம்மடுவில் வாழ்ந்த, குருதியையும் புலாலையும் மிகவும் விரும்பி உண்ணும் கொடிய முதலையானது, குகை போன்ற தன் வாயினில் உள்ள கூர்மையான பற்களால் கஜேந்திரனின் ஒரு காலைப் பற்றிக் கொண்டது. இரத்தவெறி கொண்ட முதலை யானையின் காலைப் பற்றிக் கொண்டு விடாமல் துன்புறுத்தியது.

''மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா'' என்பது பழமொழி.

முதலைக்கு நீரில் பலம். யானைக்குத் தரையில் பலம். யானையோ, மிகவும் பருத்த உடலையுடையது.சேற்றில் அகப்பட்டுக் கொண்டது தனது பலத்தையெல்லாம் ஒருங்கே சேர்த்து முதலையை வெல்ல முயன்றும் முடியவில்லை. கால்கள் சேற்றில் அமிழ்ந்து கொண்டே சென்றன. யானையின் முயற்சி வெற்றி பெற முடியாமல் திணறியது. மாலை நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. தன் துதிக்கையில் இருந்த தாமரை மலர் வாடத் தொடங்கியது. மலர்வாடா முன்னம் திருமால் திருவடியில் சேர்க்க வேண்டுமே என்று வருந்தியது. இது நாள் வரை தானே சென்று மலரைச் சூட்டியது. இன்று இயலாமையால், ''ஆதிமூலமே'' இம்மலர் வாடாமுன்னம் வந்து ஏற்றுக் கொண்டு என் தொண்டுக்கு பங்கம் விளையாமல் காப்பாயாக என்று கூவியழைத்தது. இதனால் நமக்கெல்லாம் பாடம் கற்பிக்கப்படுகிறது. நாம் உடல்நலமுள்ள காலத்திலே தினமும் வணங்கி வழிபட வேண்டும். தளர்ந்த காலத்தில் இயலாதபோது அவன் நம் அருகில் வந்து அருள் புரிவான் என்பது உணர்த்தப்படுகிறது. இதனையே

''கிளர்ஒளி இளமை கெடுவதன் முன்னம்
வளர் ஒளி மாயோன் மருவிய கோயில்
வளர் இளம் பொழில் சூழ் மாலிருஞ்சோலை
தளர் விலராகில் சார்வது சதிரே'' (திருவாய்மொழி - 2.10-1)

என்று நம்மாழ்வார் அருளுகின்றார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கூக்குரல் விண் முழுதும் பரவியது. ஆதிமூலம் என்ற பெயர் தம் முடையது அல்ல என்று விண்ணவர் முதல் மற்ற தெய்வங்கள் வாளாவிருந்தன. இக்குரல் வைகுந்தத்தில் திருமாலின் திருச்செவிகளை அடைந்தது. இக்குரல் கேட்டவுடனே பதைபதைத்து எழுந்து அரக்கப் பறக்க மடுவங்கரையை நோக்கி கருடன் மீது அமர்ந்து வந்தாராம் திருமால்.

நாம் ஒரு அடிதூரம் திருமாலை நோக்கிச் சென்றால் அவன் பத்தடி தூரம் நம்மை நோக்கி ஓடோடி வருவான் என்றனர் வைணவச் சான்றோர். அவ்வாக்கு இங்கு நோக்கத் தக்கது.

கருடன் மீதமர்ந்து திருமால் வேகமாகப் புறப் பட்டதைக் கண்ட விண்ணவரும், மற்ற தெய்வங் களும் மண்ணுலகில் எந்த பக்தனுக்கோ பேராபத்து நிகழ்ந்து விட்டது போலும் என்று எண்ணி அதிர்ந்து போயினராம். கருடன் மேலேறி காற்றினும் வேகமாய் வந்தாராம்.

''பறவையேறி.... வேழ்த்து அரந்தையை ..... தீர்த்
தானை''
*(திருவெழுக்கூற்றிருக்கை)*

''கவனமா களிற்றின் இடர்கெடத் தடத்துக்காய்
சினப்பறவை ஊர்ந்தானே''
*(திருவாய் மொழி - 9-2-5)*

''காக்க நீ வருவாயே கருடனேறி''
என்ற திருமாலடியவர் பாடல் நோக்கத்தக்கது.

முதலை தன் பற்களால் ஆனையின் கால்களில் விஷத்தைக் கக்கியது. ஆனை அருந்துயர் உற்றது. இதனையே

''முதலையின் பிலம்புரை பேழ்வாய் வெள்ளெயிறுற
அதன் விடத் தினுக்கு அணுங்கிய ஆனை''
(திருப்பள்ளி - 2)

''பொய்கை வாய் முதலை தன்னால் அடர்ப்புண்டு
கொலையார் வேழம் நடுக்குற்றுக் குலைய''
*(பெரிய திருமொழி - 8-6-7)*

''முதலைச் சிறைப்பட்டு நின்ற கைம்மா''
*(திருவாய் மொழி - 3-5-1)*

என்கின்றனர் ஆழ்வார்கள்.

ஓடோடி வந்த திருமால் மடுவங்கரை அடைந்த வுடன் ஆனையின் துயரைக் கண்டு சற்று நேரம் நின்று விட்டாராம். நீரிலே நெருப்பு கிளறுமாப் போலே சினம் பொங்கி வந்ததாம்.

''ஆனைக்காகி செம்புலால் உண்டு வாழும் முதலை
மேல் சீறி வந்தார்''
*(திருமாலை - 28)*

நின்றவர் முதலையின் வாய் எவ்வளவு தூரம் ஆனையின் கால்களைக் கௌவிக் கொண்டுள்ளது என்பதை அறிந்து முதலையின் கழுத்திற்குச் சரியாக சக்கராத்தாழ்வானை ஏவினாராம். இதனையே

''மீனமர் பொய்கை நாண்மலர் கொய்வான்
வேட்கையினோடு சென்றிழிந்த
கானமர் வேழம் கையெடுத்தலறக்
கரா அதன் காலினைக் கதுவ
ஆனையின் துயரம் தீரப் புள்ளூர்ந்து
சென்று நின்று ஆழி தொட்டானை''
*(பெரிய திருமொழி 2-3-9)*

என்கின்றார் திருமங்கையாழ்வார். இவ்வாறு முதலை யைக் கொன்றார் திருமால். இதனை ஆழ்வார்கள் கீழ்கண்டபடி பாடியுள்ளனர்.

''கைந்நாகத்து இடர்கடிந்த கனல் ஆழிப்படை
உடையான்''
*(பெரிய. திரு. 4-9-11)*

''ஆழி முன்னேந்தி கம்ப மாகரி கோள்விடுத்தானே''
*(பெரிய. திரு. 5-1-9)*

''குட்டத்துக்கோள் முதலை துஞ்சக் குறித்து எறிந்த
சக்கரத்தான்''
*(மூன். திருவ. 5-1-9)*

''மடுக்கிடந்த மாமுதலை கோள் விடுப்பான்
ஆழிவிடற்கு''
*(நான். மு.திருவ-12)*

முதலையின் கழுத்தை அறுத்துத் திரும்பியது சக்கரம். திருமால் கருடன் மீதிருந்து இறங்கி யானை யின் தும்பிக்கையைப் பிடித்து இழுத்து யானையைக் கரையேற்றினார். தனது மேல் ஆடையால் ஆனையின் கால்களில் இருந்த இரத்தத்தையும், இறந்த முதலையின் இரத்தத்தையும் துடைத்து, மேலாடையை உருண்டை யாக்கி வாயினால் ஊதி ஆனையின் காலுக்கு ஒற்றடம் கொடுத்தாராம். ''கஜேந்திரா! காலதாமதம் செய்து வந்து விட்டேன் என்று வருந்தாதே!'' என்று ஆனையை அணைத்து அன்பு செலுத்தினாராம்.



**மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் திருவெம்பாவை – திருப்பள்ளி எழுச்சி நிறைவு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமிகு சேது. இராமச்சந்திரன் இ.ஆ.ப. அவர்கள் பரிசுகள் வழங்கினார்கள். திருக்கோயில் இணை ஆணையாளர் – நிர்வாக அதிகாரி, தக்கார் திருமிகு பா. பாஸ்கரன் பி.எஸ்சி., பி.எல் அவர்கள் உடன் உள்ளார்கள்.**

---

இதனைக் கண்ட ஆனை நெஞ்சம் உருகி எம் பெருமான் திருவடிகளில் தும்பிக்கையிலிருந்த தாமரை மலரைச் சேர்த்து மண்டியிட்டு வணங்கி ''ஆதிமூலமே! ஆபத்பாந்தவரே! அனாத ரட்சகா!'' என்றெல்லாம் கூவி அகம் மகிழ்ந்தது, எல்லை இல்லா இன்பம் அடைந்ததாம். இவ்வாறு பக்திமிகுந்த கஜேந்திரனின் துயரைப் போக்கிய திருமாலின் அருளை ஆழ்வார்கள் கீழ்காணுமாறு பாடி மகிழ்ந்துள்ளனர். ஆழ்ந்த பக்தி கொண்டதால் ஆனை ''கஜேந்திர ஆழ்வான்'' என்று சிறப்பிக்கப்பட்டது.

''ஆனைக்கு நீ அருள்செய்தமையால்
(பெரியா. திரு.4-10-1)

''மதயானை கோள் விடுத்தாய்''
(நாச். திரு. 2-3)

''மால்யானை படுதுயரங் காத்தளித்த''
(முத. திரு.29)

''மால்யானை வென்றி முடித்தன்றே''
(இரண். திரு-22)

''சுனை வளர்ந்த மாமுதலை கொன்றான்''
(மூன் திரு.50)

''பூந்தண் புனல் பொய்கை யானை இடர்கடிந்த''
(திருவாய்மொழி 2-8-2)

''ஆனைக்கு அன்று அருளை ஈந்த'' (திருமா - 44)

''காரானை இடர் கடிந்த கற்பகத்தை''
(பெரிய திரு. 2-5-1)

இவ்வாறு எம்பெருமானை ''நம்பிக்கையோடு தும்பிக்கையைத்'' தூக்கி சரணாகதி பண்ணின கஜேந்திரன் தன் உயர்ந்த பக்தியினால் எம்பெருமானால் காத்து அருளப்பட்டான். திருமால் திருநாட்டையும் சென்றடைந்தான். மாக்கள் இனத்தைச் சேர்ந்த விலங்கானாலும் பகுத்தறிவு கொண்டு நாமும் ''கஜேந்திரனைப்'' போல ஆழ்ந்த பக்தியுடன், பகவத் பாகவதத் தொண்டுகளைச் செய்து நலம் பல பெற்று துயர் நீங்கி பல்லாண்டு வாழ்வோமாக. கஜேந்திர ஆழ்வான் வாழ்க! வாழ்க!!

★ ★ ★

# பிரகலாதாழ்வார்

– 'சேவை நிதி' திருமதி கே. இராஜலட்சுமி

*(சென்னையில் வைணவ மாதர் மகாநாட்டில் படிக்கப்பெற்ற கட்டுரை.)*

ஸ்ரீமந் நாராயணன் தீயோர்களை அழித்து நல்லோர்களைக் காத்து தர்மத்தை நிலைநாட்டுவதற்காக அவ்வப்போது யுகங்கள் தோறும் திருநாட்டிலிருந்து மண்ணுலகில் தோன்றுகின்றான்.

''பரித்ராணாய சாதூனாம் விநாசாய சதுஷ்க்ருதாம்
தர்ம ஸ்மஸ்தாபநார்த்தாய சம்பவாமி யுகே
யுகே''
*(அத்யாயம் 4 சுலோகம் 8.)*

''நம்பினோர் கெடுவதில்லை நான்குமறை தீர்ப்பு'' எனும் சான்றோர் வாக்கிற்கிணங்க பிரகலாதனாகிய ஐந்து வயதுடைய சிறுவனான பக்தனைக் காக்க, அரக்கனாகிய பிரகலாதன் தந்தை இரணிய கசிபுவைக் கொன்று, தர்மத்தை நிலைநிறுத்த நரசிங்கமாக அவதரித்தான். சிசுவதைகள் நடக்கும் இந்தக் காலத்தில் ஒரு சிறுவனைக் காக்க வந்த இந்த நரசிங்க அவதாரத்தின் சிறப்பை இங்கு காண்போம்.

இரணியகசிபு, இரணியாக்கதன் ஆகிய இருவரும் உடன் பிறந்தோர்கள். இவர்களில் இரணியாக்கதன் என்னும் இளையவன் பூமியைக் கடலின் அடியில் சென்று வைத்தான். பூமிதேவியின் வேண்டுகளுக்கிணங்க, திருமால் வராகமாக (பன்றியாக) அவதரித்து இரணியாக்கதனைக் கொன்று பூமியை மேலே கொண்டு வந்து நிலை நிறுத்தினான்.

தன் தம்பியாகிய இரணியாக்கதனை, திருமால் கொன்றதை அறிந்து கடுஞ்சினம் கொண்டான். திருமாலைக் கொல்வதற்காக கடுந்தவம் செய்து பிரமனிடமிருந்து கீழ்க்காணும் வரங்களைப் பெற்றான்.

1. பூமியிலும் விண்ணிலும் சாகக் கூடாது, 2. வீட்டிற்கு உள்ளும் வெளியிலும் சாகக்கூடாது, 3. இரவிலும் பகலிலும் சாகக்கூடாது, 4. தேவர், மனிதர், அரக்கர், விலங்கினம், பறவையினம் போன்ற எந்தப் பிறவி எடுத்தோராலும் சாகக்கூடாது, 5. எந்த ஆயுதங்களாலும் சாகக்கூடாது.

இத்தகைய வரத்தைப் பெற்றதனால் தேவர் முனிவர் ஆகிய அனைவரும் தன்னையே தெய்வமாகக் கொண்டு போற்ற வேண்டும் என்று ஆணையிட்டான். ஆணையை ஏற்காதவர்களைச் சிறையிலிட்டுக் கொடுமைப்படுத்தினான். இதைக் கண்ட தேவர்கள் திருமாலிடம் முறையிட, காத்தற் கடவுளான திருமால், குறைகளைப் போக்குவதாக உறுதி கூறினார்.

இதற்கிடையில் இரண்யகசிபு மீண்டும் வலிமை பெற தவம் செய்ய கானகம் சென்றான்.

தேவர்கள் ஒன்று கூடி ஆலோசித்தனர். இரண்ய கசிபுவின் மனைவி கர்ப்பமாக இருப்பதை அறிந்தனர். எனவே ஸ்ரீ நாரத முனி அவர்களை மண்ணுலகம் அனுப்பி, இரணியன் மனைவிக்கு திருமால் வரலாறுகளைக் கூறும்படி வேண்டினர்.

அவ்வாறே நாரதர் இரணியன் அரண்மனை சென்று, அவன் மனைவிக்கு ஸ்ரீமந் நாராயணனின் வரலாறுகளையும் சிறப்புகளையும் சொன்னார். அவள் உறங்கிவிடவே, அவள் வயிற்றிலுள்ள கருவாகிய குழந்தை கேட்டது. எனவே குழந்தைகள் கருவுற்றிருக்கும் போது பெறப்படும் ஞானம், பிறந்த பின்னர் அமையும் என்பது ஆன்மீகக் கருத்தாகும். இதனையே இன்றைய விஞ்ஞான மருத்துவ உலகமும் ஆதரிக்கின்றது. இதைக்

''கருவிலே திருவிலாதீர்'' என்கின்றார் தொண்டரடிப் பொடியாழ்வார்.

இப்படி இரண்யனுக்குப் பிறக்கும் குழந்தையும் அரக்கப் பண்புடையதானால் தொல்லை அதிகரிக்கும் என்று அதனைப் பக்தியுடைய குழந்தையாக மாற்றி ''முள்ளைக் கொண்டே முள்ளை எடுப்பதைப் போல'' இரணியன் பிள்ளையைக் கொண்ட அவனை அழிக்க திட்டமிட்டனர்.

இரணியகசிபு தவத்தை முடித்து வரம்பெற்று நாட்டை அடைந்தான். குழந்தையும் பிறந்தது. அக்குழந்தைக்குச் சிறப்புடையவன் என்ற பொருளுடன் பிரகலாதன் என்றுபெயர் சூட்டி, வளர்ந்து பள்ளிப் பருவம் நிறைந்தவுடன் ஆசிரியர்களை அழைத்து, பிரகலாதனனுக்குக் கல்வி புகட்டுமாறும், தானே

கடவுள் என்பதை ''இரண்யாய நம'' என்று கற்றுத் தரு மாறும் ஆணையிட்டான்.

ஆசிரியர்கள் பிரகலாதனைத் தங்கள் குருகுலத் திற்கு அழைத்துச் சென்று, மற்ற மாணவர்களுடன் சேர்த்துப் பாடம் கற்பித்தனர். ஆசிரியர்கள் ''இரண்யாய நம-'' என்று கற்பித்தனர். ஆனால் ''பிரகலாதனோ அரிஓம் நம'' என்ற சொல்லி ஆசிரியர்கள் தவற்றினைச் சுட்டிக் காட்டி, குருவை விஞ்சிய மாணாக்கன் ஆனான். அது மட்டுமின்றி ஆசிரியர்கள் இல்லாத போது மற்ற மாணவர்களுக்கும் ''அரி நாமத்தை''க் கற்றுத் தந்தான். நமது கடந்தகால திண்ணைப் பள்ளிக் கூடங்களிலும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முதன் முதலில் ''அரி'' நாமத்தையே கற்றுத் தந்தனர் என்பது இங்கு கவனிக்கத் தக்கது.

எத்தனையோ முயன்றும் ஆசிரியர்களால் பிரக லாதன் மனத்தை மாற்ற முடியவில்லை. ஆசிரியர்கள் பிரகலாதனை இரண்யகசிபுவிடம் ஒப்படைத்து வணங்கிச் சென்றனர்.

### பெற்றோர் அறிவுரை

இதையறிந்து வருந்திய இரண்யகசிபு பிள்ளையை அன்புடன் அழைத்தும், கண்டித்தும், பயமுறுத்தி யும் திருத்த முயன்றான். ஆனால் அவன் முயற்சி யனைத்தும் முறியடிக்கப்பட்டு விட்டன. எனவே அவனைத் தாயிடம் ஒப்படைத்துத் திருத்தும்படிக் கூறினான். அவளது அன்பு கலந்த முயற்சியும் ''விழ லுக்கு இறைத்த நீராயிற்று''.

### பிரகலாதனின் அறிவுரை

பிரகலாதன் தந்தையை வணங்கிக் கூறலானான். ''ஸ்ரீமந் நாராயணனே முழுமுதற் கடவுள், தோற்றமும் முடிவும் இல்லாதவன், பிறப்பும் இறப்பும் அற்ற வன், வாய்மையிலிருந்து விலகாதவன், மெய்யன், சேயன், அணியன், உலகைத் தோற்றுவித்துக் காத்து, அழிக்கும் வல்லமை பெற்றவன், உயிர் உள்ள, உயி ரல்லாத உலகப் பொருள்கள் அனைத்திற்கும் மூல காரணன், அவனே பரம்பொருள். எல்லோர் உள்ளங் களிலும் ஞானாசிரியனாக வீற்றிருப்பவன், அவனை எளிதில் யாராலும் பார்க்க முடியாது, அவனை வாயால் புகழ முடியாது, அவனது பரமபதத்தை யோகிகளால் மட்டுமே காண முடியும், உலகம் முழுவதும் அவனிட மிருந்தே தோன்றியது, அவனே அனைத்துமாக உள் ளவன், அவனே நாராயணன், அவனே அரி'', அவனே என்னோடும் உங்களோடும் சேர்ந்து உலகமனைத்திற் கும் தலைவன், அவனே என்னைப் பேச வைப்பவன், அவனே உலக மக்கள் அனைவர் உள்ளத்திலும் புகுந்து அனைவரையும் இயங்க வைக்கின்றான்'' என்று பல வாறாகப் பேசினான்.

இதனைக் கேட்ட இரண்யகசிபுவுக்கு ''எரியும் தீயில் எண்ணெயை விட்டாற் போல'' கடுங்கோபம் தோன்றியது. பிரகலாதா!! உன்னை என்ன செய்கிறேன் பார் என்று சீறிப் பாய்ந்தான். கோபம் கொண்ட இரண்யகசிபு அவனைக் கொன்றுவிட வேண்டுமென்று தீர்மானித்தான். பல விதமுயற்சிகள் செய்தான்.

### அரக்கர்கள் தாக்கியது

இரண்யகசிபு நூற்றுக்கணக்கான அரக்கர்களை அழைத்துக் கொடிய ஆயுதங்களைக் கொண்டு பிரக லாதனைக் கொன்று விடுமாறு ஆணையிட்டான். அப்போது பிரகலாதன் அரி நாமத்தையே சொல்லிக் கொண்டு இருந்தான். அரக்கர்கள் தாக்கிய ஆயுதங்கள் அனைத்தும் பிரகலாதனின் உடலை ஒன்றும் செய்து விட முடியவில்லை. பிரகலாதன் ''அரக்கர்களே! நீங்கள் என்னைத் தாங்கிய அத்துணை ஆயுதங்கள் உள்ளும், என்னுள்ளும் நம் இறைவன் விஷ்ணு குடிகொண் டிருக்கிறான். எனவே, இந்த ஆயுதங்கள் பயனற்றுப் போயின'' என்றான். இதனைக் கண்ட அரக்கர்கள் பிரகலாதனை அழைத்துக் கொண்டு, இரண்யகசிபு விடம் சென்று விட்டு, 'பிரபுவே இவனை எங்கள் ஆயுதங்களும், முயற்சிகளும் எள்ளளவும் தாக்க வில்லை' என்று கூறிச் சென்றனர். இதைக் கேட்ட இரணியனின் கோபம் பொங்கியெழுந்தது.

### நச்சுப் பாம்புகள்

அடுத்த முயற்சியாக தக்ஷகன் முதலான பாம்புக் கூட்டங்களைக் கூப்பிட்டு, பிரகலாதனைக் கொன்று விடும்படி ஆணையிட்டான்.

அந்தக் கொடிய நச்சுப்பாம்புகள் பிரகலாதன், உடல் முழுதும் கடித்துக் குதறின. பிரகலாதனோ அரி நாமத்தையே பாடிக் கொண்டிருந்தான். எனவே பிரக லாதனுக்கு ஒரு சிறு வலி கூடத் தெரியவில்லை. பாம்புகள் வலுவிழந்தன. அவை யோசித்தன. இச் சிறுவன் நமது பாம்பரசனான அனந்தன் மீது பள்ளி கொண்டிருக்கும் பரந்தாமனின் பெயரைப் பாடுகின் றான்.

அப்படிப்பட்ட பக்தனை நாம் கடித்ததை அறிந் தால் நம் அரசன் அனந்தன் கோபிப்பான் என்று நினைத்து, செய்த பாபத்திற்குக் கழிவாக பிரகலாதனை வணங்கிச் சென்றன. இதையறிந்த இரண்யகசிபு ஆச்சரியப்பட்டதோடு மிகுந்த கோபமும் கொண்டான். அடுத்த தண்டனையை யோசித்தான்.

### யானைகளை ஏவியது

மதம்பிடித்த யானைகளை வரவழைத்து அவை

களுக்கு மதுவைக் கொடுத்து வெறியேற்றி பிரகலாதனைக் கொல்ல ஏவினான். அப்போதும் பிரகலாதன் அரி நாமத்தையே பாடினான்.

அந்த யானைகள் பிரகலாதனைக் கீழே தள்ளி ஈட்டி போன்ற தங்கள் தந்தங்களினால் அவன் மார்பைக் குத்திக் கொல்ல முயன்றன. ஆனால் பிரகலாதனை ஒன்றும் செய்ய முடியவில்லை. அதற்குப் பதிலாக அவைகளின் தந்தங்கள் தான் உடைந்தன. தான் பெற்ற பிள்ளையைக் கொல்லத் தானே ஆணையிட்டது மன்றி, அவன் எப்போது இறப்பான் என்று ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்த தந்தையை நோக்கி பிரகலாதன் பேசினான்.

''தந்தையே! வஜ்ரம் போன்ற இந்த யானைகளின் தந்தங்களை ஒடிக்க என்னால் இயலாது. ஒடிக்க என்னிடம் யாதொரு பலமும், ஆயுதமும் இல்லை. ஐந்து வயது அறியாப் பாலகன். ஆனால் தன் புகழைப் பாடும் பக்தனின் ஆபத்துக்களைப் போக்கிடும் ஆபத்பாந்தவனின் தியானம் தான் எனக்கு பலமாக அமைந்தது. இதையறிந்து இனியாகிலும் திருமாலே முழுமுதற் கடவுள் என்பதை உணர்ந்து அவன் அடிபணிந்து உய்யுங்கள்'' என்றான்.

இதனைக் கண்ட யானைகள் யோசித்தன, பிராயச்சித்தமாக பிரகலாதன் அடிவணங்கி ''ஆதிமூலமே'' என்று கூவிச் சென்றன.

### காற்றும் நெருப்பும்

இரண்யகசிபு அக்னி தேவனையும், வாயு தேவனையும் கூப்பிட்டு, மலைபோல் குவிக்கப்பட்ட கட்டைகளை எரித்து நெருப்புத் தணலை உண்டாக்கி, பிரகலாதனை நெருப்பின் நடுவில் தூக்கி எறியச் சொன்னான். அவர்களும் அப்படியே செய்தனர். இப்போதும் பிரகலாதன் அரிநாமத்தையே பாடினான். எனவே அந்தக் கொடிய நெருப்பு சிறுபுண்ணையும் துன்பத்தையும் தரவில்லை. மாறாக குளிர்ச்சியாகத்தான் இருந்தது.

இங்கு, ''வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்'' என்ற ஆண்டாளின் திருப்பாவை பாசுரம் நோக்க தக்கது.

### நஞ்சு கலந்த உணவு

இரண்யகசிபுவின் கோபம் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. அரண்மனை சமையல்காரர்களைக் கூப்பிட்டு, பிரகலாதனனுக்கு அளிக்கும் உணவில் நஞ்சினைக் கலந்து தரும்படி ஆணையிட்டான். பிரகலாதன் உணவு உண்ணும் முன் அதனை திருமாலுக்குக் கண்டருளப் பண்ணி உண்டான். திருமாலின் திருக்கண்பார்வை பட்டவுடன் அந்த நஞ்சு அமுதாக மாறியது. பிரகலாதனை ஒன்றும் செய்யவில்லை. இதைச் சமையல்காரர்கள் இரணியகசிபுவிடம் கூறினார். இதைக்கேட்ட இரணியகசிபுவின் கோபம் வளரத் தொடங்கியது.

இன்றும் திருமாலடியார்கள் உணவு கொள்ளும் முன் சாதத்தைத் திருமாலின் முன் வைத்து, திருமாலின் திருக்கண்பார்வை படச்செய்வர். திருமாலின் திருக்கண் பார்வை பட்டவுடன் சாதாரண சாதம், பிரசாதமாக மாறி நன்மையைத் தருகின்றது. இதனையே

''உண்ணும் சோறும் பருகும் நீரும் தின்னும்
வெற்றிலையுமெல்லாம் கண்ணன் எம்பெருமான்
*(திருவாய்மொழி - 6-7-1)*

என்று நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார்.

### மலை உச்சியிலிருந்து உருட்டியது

எப்படியாவது, தனக்கு எதிராக மாறிய பிள்ளை பிரகலாதனைக் கொன்றுவிடத் தீர்மானித்தான் இரணியகசிபு. தன் பணியாளர்களைக் கூப்பிட்டு, பிரகலாதனை மலை உச்சியிலிருந்து உருட்டி விட்டுக் கொன்று விட ஆணையிட்டான். பணியாளர்களும் அப்படியே செய்தனர். பிரகலாதன் அப்போதும் அரி நாமத்தையே பாடினான். திருமால் அவன் உடலைப் பந்து போலாக்கி விட்டான். அதனால் பிரகலாதன் பந்தைப் போல தாவித் தாவி எந்தவிதத் தொல்லையும் இன்றி மலையடிவாரத்தை நெருங்கிக் கொண்டிருந்தான். பிரகலாதனின் ஆத்மத் தாயாகி மண்மகள் அவனைத் தன் கைகளினால் ஏந்திக் கொண்டு காத்தருளினாள். பணியாளர்கட்கு முன்னமே பிரகலாதன் அரண்மனையை அடைந்தான். இதைக் கண்ட இரணியன் மீண்டும் ஆத்திரம் அடைந்தான்.

### கல்லைக்கட்டி கடலில் தள்ளியது

பின்னர் பணியாட்களைக் கூப்பிட்டுப் பிரகலாதன் உடலில் ஒரு கல்லைக் கட்டி, நடுக்கடலில் தள்ளி விடும்படி கட்டளையிட்டான். பணியாளர்களும் அப்படியே செய்தனர். பிரகலாதன் அப்போதும் திருமாலையே பாடினான். திருமால் அந்தக் கல்லை தக்கை போல் ஆக்கி வைத்தார். மிதந்த கல்லைப் பிடித்துக் கொண்டே நலமுடன் கரையேறி, அரண்மனையை அடைந்தான். பிரகலாதனைக் கண்ட இரண்யகசிபு மிக மிக ஆச்சரியமும் ஆத்திரமும் அடைந்தான்.

### பிரகலாதன் இரணியன் தர்க்கம்

இரணியன் மகனை நோக்கி, ''அடே பிரகலாதா! நீ துதிக்கின்ற நாராயணன் தான் என் தம்பியும் உன் சிறிய தகப்பனுமான இரணியாக்கதனைக் கொன்ற பாபி. நான் அந்த நாராயணனைக் கொன்று என் தம்பியின் ஆத்மாவைத் திருப்திப்படுத்த நினைக்கிறேன். நீ துதிக்கும் நாராயணனை எனக்குக் காட்டு, நீ சொல்வது போல் நாராயணன் தான் முழுமுதற் கடவுள் என்பது உண்மையாயின் எனக்கு அவனைக் காட்டியே தீரவேண்டும்'' என்றான்.

''தந்தையே! என் ஆத்மத் தந்தையும் முழுமுதற் கடவுளுமாகிய அரி ''எள்ளுக்குள் எண்ணெய் போலும்'', ''கறந்த பாலில் நெய்யே போலும்'', உடல்மிசை உயிரென எங்கும் பரவியுள்ளான்.

''சாணினும் உளன், அணுவினைச் சதகூறு இட்ட
கோணிலும் உளன், மாமேருக் குன்றிலும் உளன்
இந்நின்ற
தூணிலும் உளன், நீ சொன்ன சொல்லிலும் உளன்,
இத்தன்மை
காணுதி விரைவின் என்றான்''

*(கம்ப. ராமா. இரணிய வதைப் படலம்)*

''பிரகலாதா! நீ இவ்வுலகு எங்கும் பரவியுள்ள நாராயணனை இக்கம்பத்தின் வழியே நான் காணக் காட்டு, அப்படிக் காட்டவில்லையென்றால், உன்னைக் கொன்று, உன் இரத்தத்தைக் குடித்து உன்னையும் தின்பேன்.''

''அதுமட்டுமல்ல நான் தட்டிய தூணில், நான் தட்டிய இடத்தில் நான் தட்டிய அந்தக் கணமே அவன் வரவேண்டும். வருவானா? அந்த நாராயணன்'' என்றான் இரணியன்.

''என் உயிர் உங்களால் போக்கக் கூடியது அல்ல. நீங்கள் தட்டும் தூணில் தட்டும் இடத்தில், தட்டும் கணமே வருவான் நாராயணன்'' என்றான் பிரகலாதன்.

இரணியன் பிரகலாதன் சொன்னபடி அவன் அளந்து இட்டு காட்டிய தூணைத் தட்டினான். மனிதர்களாலும் விலங்குகளாலும் சாகாவரத்தைப் பெற்றிருந்தான் இரணியன். எனவே நாராயணன் மனித உடலோடும் சிங்க முகத்தோடும் பிறைச்சந்திரன் போன்ற பற்களோடும் நெருப்புப் பொறி பறக்கும் கண்களோடும், குகை போன்ற வாயினோடும் தோன்றினான்.

''அளந்திட்ட தூணை அவன்தட்ட - ஆங்கே
வளர்ந்திட்டு வாளுகிர்ச் சிங்க வுருவாய்''

*(பெரியா. திரு.1-6-9)*

தோன்றிய நரசிங்கம் எட்டுத்திசையும் அண்டங்களும் அதிருமாறு சிரித்தது.

இரணியன், தோன்றிய நரசிங்கத்தைக் கண்டு வெகுண்டான். பல நாட்களாகத் தேடிக் கொல்ல நினைத்த நாராயணன் தானே வந்து அகப்பட்டுக் கொண்டதைக் கண்டு அவனுடன் போரிடத் தொடங்கினான்.

போருக்குத் தயாராக நின்ற தந்தையை நோக்கி பிரகலாதன் எச்சரித்தான். ''தந்தையே! தோன்றிய நரசிங்கனைத் துதித்து வணங்கினால், அவன் உன் தவறைப் பொறுத்து அருள்புரிவான்'' என்றான்.

ஆனால் இரணியனோ அதைப் பொருட்படுத்தாமல் போரிடத் தயாரானான். அந்த நேரம் மாலை நேரம். இரணியன் பகலிலும் சாகக்கூடாது இரவிலும் சாகக் கூடாது என்று வரம் பெற்றுள்ளான். எனவே நரசிங்கம் பகலும் அல்லாத, இரவும் அல்லாத கதிரவன் மறையும் அந்திப்பொழுது வரும் வரை காத்திருந்து அந்தி நேரத்தில் இரணியனைப் பிடித்துத் தூக்கினான்.

இரணியன் பூமியிலும், ஆகாயத்திலும், வீட்டிற்கு உள்ளும், வெளியிலும் சாகக்கூடாது என்று வரம் பெற்றுள்ளதால், வீட்டிற்கு உள்ளும் வெளியும் அல்லாத, வாயிற்படியில் அமர்ந்து இரணியனது உடலை பூமிக்கும் ஆகாயத்திற்கும் இடையில் தன்மடிமேல் வைத்துக் கொண்டான். ஈரமுள்ள ஆயுதம் ஈரமில்லாத ஆயுதம் எதனாலும் தான் சாகக்கூடாது என்று வரம் பெற்றுள்ளதால் நரசிங்கம் தனது கைவிரல் நகங்களை பெரிதாக வளர்த்துக் கொண்டு அவற்றையே ஆயுதமாக்கிக் கொண்டான்.

பின்னர் தனது நகங்களால் இரணியன் மார்பைப் பிளந்து, கண் பிதுங்கும் படியாகவும், வாய் அலரும் படியாகவும் கொன்றது நரசிங்கம். இதனை பெரிய ஆழ்வார் பின்வருமாறு அருளியுள்ளார்.

''அந்தியம் போதில் அரி உருவாகி அரியை
அழித்தவனை''

*(திருப்பல்லாண்டு 6)*

இரணியனைக் கொன்று அவன் குடல்களைக் கழுத்தில் மாலையாகப் போட்டுக் கொண்டது நரசிங்கம்.

* * *



திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலுக்கு நன்கொடையாளர்கள் அமைத்துத் தந்த "இலவச குளியலறை"களை சென்னை இணை ஆணையாளர் திருமிகு கோ. பக்கிரிசாமி பி.எசி., பி.எல் அவர்கள் திறந்து வைத்தார்கள். திருக்கோயில் உதவி ஆணையாளர் – செயல் அலுவலர் – திருமிகு ஆ. குப்புசாமி பி.ஏ., பி.எல் அவர்கள் உடன் உள்ளார்கள்.

''கூரார்ந்த வள்ளுகிரால் கீண்டு - குடல் மாலை
சீரார் திருமார்பின் மேற்கட்டி - செங்குருதி
சோரக் கிடந்தானைக் குங்குமத் தோள் கொட்டி
ஆரா எழுந்தான் அரி உருவாய்.''

*(சிறிய திருமடல் 44-45)*

ஸ்ரீமந் நாராயணன் தான் சொன்னபடி, தன் சொல்லை மெய்ப்பித்து நரசிங்கமாகத் தோன்றிய வடிவத்தைக் கண்டு, பிரகலாதன் அஞ்சி, ஒடுங்கி தூர விலகி நின்றான்.

ஐந்து வயது சிறுவனான பிரகலாதன் அரியே பரம்பொருள் என்றுணர்ந்து அவன்பால் ஆரா பக்தி கொண்டிருந்தான். தந்தையால் சொல்லொணாத துயரங்களை அடைந்தபோதும் அத்துன்பங்களிலிருந்து தன்னைத் தவறாது காப்பார் அரி என்ற ஆழ்ந்த நம்பிக்கையும் கொண்டிருந்தான். இத்தகைய ஆழ்ந்த பக்தியுடன் விளங்கியதால் தான் ''பிரகலாதாழ்வான்'' என்ற சிறப்புப் பெயர் பெற்றான்.

நரசிங்கப் பெருமான் கோபம் தணிந்து பிரகலாதனை அன்போடும் அருளோடும் நோக்கி அருகில் அழைத்து அணைத்து அருள்புரிந்தார்.

நரசிங்கப் பெருமான் பிரகலாதனிடம் ஏதேனும் வரம் பெற்றுக்கொள் என்று கூறினார். பிரகலாதாழ்வாரோ தான் எத்துணைப் பிறவி எடுத்தாலும் ஸ்ரீமந் நாராயணனை மறவாத பக்தனாகப் பிறக்க வேண்டுமென்றும், தன் தந்தையின் பாபங்களை நீக்கி மன்னித்து அருள வேண்டுமெனவும் வரம் கேட்டார். பெருமாளும் அந்த வரத்தைக் கொடுத்தார்.

தந்தை இறக்க தானே காரணமாக இருந்ததை எண்ணி உடலும், மனமும் வாடினான். இதையறிந்த பெருமாள் பிரகலாதாழ்வாரை நோக்கி ''இனி உன் வம்சத்தில் யாரையும் கொல்வதில்லை'' என்ற வரத்தையும் தந்தருளினார். பிரகலாதன் முடி சூடி நல்லாட்சி புரிந்துவந்தார்.

இவ்வரத்தின்படி வாமன அவதாரத்தில் மாபலியைக் கொல்லாது பாதாள உலகில் அவனை ஆழும் படிச் செய்தார்.

### பிரகலாதாழ்வார் வரலாற்றின் பலன்

இந்தப் புனிதமான பிரகலாதாழ்வாரின் வரலாற்றைக் கேட்பவர்கள் - படிப்பவர்கள் பாபங்கள் எல்லாம் உடனேயே அழிந்துவிடும். இவ்வரலாற்றை பௌர்ணமி அன்றோ அமாவாசை அன்றோ, அஷ்டமியிலோ, த்வாதசியிலோ கேட்பவர்க்கும் படிப்பவர்க்கும் கோதான பலன் கிட்டும். இவர்களை ஸ்ரீமந் நாராயணன் எப்பொழுதும் காத்து அருள்புரிவார் என்று பராசர முனிவர் அருளியுள்ளார்.

ஊழிதொறும் ஊழிதொறும் பிரகலாதாழ்வார் புகழ் வாழ்க!


★ ★ ★



பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திருமிகு ஆர். விசுவநாதன் அவர்கள் அன்னதானத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். திருக்கோயில் இணை ஆணையர் / நிர்வாக அதிகாரி திருமிகு கே.கே. இராஜா, எம்.ஏ. பி.எல். அவர்களும், உதவி ஆணையர் / நேர்முக உதவியாளர் திருமிகு பி.ஆர். அசோக் அவர்களும் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.

**அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்.**

பதிவு எண். T.N/CHIEF PMG/515/2002/WPP 283



மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் 23-3-2002 அன்று பகல் 12.15 மணி அளவில் மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ''அன்னதானத் திட்டத்தை''த் தொடங்கி வைத்து அடியார்களுக்கு அமுதுபடைக்கிறார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.

ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,

அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,** 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.